இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com


# தினபூமி

thinaboomi.com


இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com





## ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாக இங்கிலாந்து, பிரான்ஸ் ஆதரவு


...2-ம் பக்கம்

## கேரளாவில் குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்ட 2-வது நபருக்கும் தொற்று உறுதி

...3-ம் பக்கம்

## இந்தியா-வங்காளதேசம் மோதும் 2-வது டெஸ்ட் மழை காரணமாக முதல் நாள் ஆட்டம் பாதியில் ரத்து

...7-ம் பக்கம்



### தமிழகத்தின் கோரிக்கைகள் தொடர்பாக

# டெல்லியில் பிரதமர் மோடியுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு

## மத்திய அரசின் நிதியை விடுவிக்கக்கோரி மனு

சென்னை, செப். 28-

டெல்லியில் நேற்று பிரதமர் மோடியை முதல்வர் மு.க ஸ்டாலின் சந்தித்து பேசினார். அப்போது பிரதமரிடம் தமிழகத்திற்கான நிதியை மத்திய அரசு விடுவிக்கக்கோரி அதற்கான மனுவை அவர் அளித்தார்.

**முதல்வர் பேட்டி....**

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த மாதம் 27-ம் தேதி அமெரிக்கா சென்றார். 19 நிறுவனங்களுடன் ரூ.7,616 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டார். 17 நாட்கள் அமெரிக்க பயணத்தை முடித்துக் கொண்டு கடந்த 14-ம் தேதி அவர் சென்னை திரும்பினார். அப்போது சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், மெட்ரோ ரெயில் நிதி, பள்ளிக்கல்வித்துறை நிதி விவகாரம் தொடர்பாக பிரதமரை நேரில் சந்தித்து வலியுறுத்த உள்ளேன் என்று கூறினார்.

**பிரதமருடன் சந்திப்பு...**

இந்த நிலையில் பிரதமர் மோடியை நேரில் சந்திப்பதற்காக சென்னை விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் மாலை புறப்பட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் இரவு டெல்லி சென்றடைந்தார். முதல்வருடன், அரசின் தலைமை செயலர் முருகானந்தம், முதல்வரின் உதவியாளர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் உடன் சென்றனர். இந்நிலையில் நேற்று பிரதமர் மோடியை முதல்வர் ஸ்டாலின் சந்தித்தார். அப்போது பிரதமர் மோடி அவரை இன்முகத்துடன் வரவேற்றார்.

**கோரிக்கை மனுவை...**

பிரதமருக்கு சால்வை அணிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பரஸ்பர வணக்கம் தெரிவித்துக் கொண்டார். அதன் பிறகு அமர்ந்து பேசினார். பிரதமர் மோடி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்றது. தமிழகத்தின் பாரம்பரியத்தை பறைசாற்றும் விதமாக தடம் பெட்டகத்தை பிரதமர் மோடிக்கு முதல்வர் பரிசளித்தார். நெல்லையில் தயாரிக்கப்படும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழைநார் கூடை, பனை ஓலை பெட்டியை பிரதமர் மோடிக்கு பரிசளித்தார். அப்போது அவர் தமிழகத்திற்கு நிலுவையில் உள்ள நிதி, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கான 2-ம் கட்ட நிதி, பள்ளிக்கல்வி சமக்ர சிக்சா திட்டத்துக்கு நிதி உள்ளிட்டவற்றை மத்திய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கூறி அதற்கான கோரிக்கை மனு அளித்தார்.



● தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று புதுடெல்லியில் உள்ள பிரதமர் அலுவலகத்தில், பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்து, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்திட தேவையான மத்திய அரசின் நிதி, சமக்ரசிக்ஷா திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு நிரந்தர தீர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார்.

### பிரதமர் மோடியை சந்தித்தது ஏன்?

# டெல்லியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி

புதுடெல்லி, செப். 28-

டெல்லியில் பிரதமரை சந்தித்து தமிழக மக்கள் நலன் சார்ந்த 3 கோரிக்கைளை முன்வைத்ததாகவும், இந்த சந்திப்பை பயனுள்ளதாக மாற்ற வேண்டியது பிரதமரின் கையில் தான் உள்ளது. என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் அரசுமுறை பயணமாக டெல்லி சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், நேற்று காலை பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து 45 நிமிடங்களுக்கு மேல் பேச்சுவார்த்தை நடத்தினார். இதனைத் தொடர்ந்து, தில்லியில் உள்ள திமுக அலுவலகம் சென்ற முதல்வர் ஸ்டாலின் செய்தியாளர்களை சந்தித்து பிரதமருடனான சந்திப்பு குறித்து விளக்கம் அளித்தார்.

செய்தியாளர்களிடம் முதல்வர் ஸ்டாலின் கூறியதாவது: "இந்த சந்திப்பு இனிய சந்திப்பாக இருந்தது. பிரதமரும் எங்களிடம் மகிழ்ச்சியுடன் பேசினார். இந்த மகிழ்ச்சியான சந்திப்பை பயனுள்ளதாக மாற்ற வேண்டியது பிரதமரின் கையில் தான் உள்ளது. மத்திய அரசு உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று 3 முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளேன். கோரிக்கைகளின் சாராம்சங்களை தெளிவாக எழுதி ஒப்படைத்துள்ளோம்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்ட பணிகளை மத்திய- மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தியது போல், 2-ம் கட்ட பணிகளையும் செயல்படுத்த வேண்டும் என்பது தமிழகத்தின் நிலைப்பாடு. இந்த 2-ம் கட்டப் பணிகளை தாமதமின்றி மேற்கொள்ள 2019-ம் ஆண்டு மாநில அரசின் நிதி, கடன் பெற்றும் பணிகள் தொடங்கி, மத்திய அரசுடன் இணைந்த திட்டமாக செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டது. மத்திய உள்துறை அமைச்சர் இதை ஏற்று, 2020-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

மத்திய நிதியமைச்சரும் இதற்கான நிதி ஒதுக்கப்படும் என்று 2021-22ம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் அறிவித்தார். தொடர்ந்து, மத்திய அரசின் திட்ட முதலீட்டு வாரியமும் ஒப்புதலை அதே ஆண்டு வழங்கியது. இந்த பணிகளுக்கு இதுவரை ரூ.18,564 கோடி செலவழிக்கப்பட்டிருந்தாலும், மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்காததால், மத்திய அரசின் நிதியும் வழங்கப்படவில்லை. இதனால், மெட்ரோ ரயில் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே, தாமதமின்றி நிதியை உடனே வழங்க கேட்டுள்ளேன்.

அடுத்ததாக, மத்திய அரசு 60 சதவீதம், தமிழக அரசு 40 சதவீதம்

(கடைசி பக்கம் பார்க்க)

### 3 முக்கிய கோரிக்கைகள்

1) சென்னை மெட்ரோ ரெயில் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு நிதி ஒதுக்க வேண்டும்.
2) பள்ளி கல்வித்துறைக்கான சமக்ர சிக்ஷா திட்டத்திற்கு நிதி விடுவிப்பது அவசியம்.
3) இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவதை தடுக்க வேண்டும்.

# சென்னை ஐகோர்ட்டின் புதிய தலைமை நீதிபதியாக கே.ஆர்.ஸ்ரீராம் பதவியேற்பு

## கவர்னர் ரவி பதவிபிரமாணம் செய்து வைத்தார்

சென்னை, செப். 28-

சென்னை ஐகோர்ட்டின் புதிய தலைமை நீதிபதியாக கே.ஆர். ஸ்ரீராம் நேற்று காலை பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு கவர்னர் ஆர்.என்.ரவி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதியாக பதவி வகித்த நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா பணி ஓய்வு பெற்றதையடுத்து, நீதிபதி ஆர். மகாதேவன் பொறுப்பு தலைமை நீதிபதியாக பதவி வகித்து வந்தார். அவர் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக நியமிக்கப்பட்டதும், சென்னை ஐகோர்ட்டின் பொறுப்பு தலைமை நீதிபதியாக டி. கிருஷ்ணகுமார் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், மும்பை ஐகோர்ட்டில் மூத்த நீதிபதியாக பணியாற்றி வந்த கே.ஆர். ஸ்ரீராமை, சென்னை ஐகோர்ட்டின் புதிய தலைமை நீதிபதியாக நியமித்து, ஜனாதிபதி திரவுபதி முர்மு உத்தரவிட்டார். அதன்படி புதிய தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராமுக்கு கவர்னர் மாளிகையில் நேற்று காலை நடந்த விழாவில் கவர்னர் ஆர்.என்.ரவி, பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.




இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த், சுப்ரீம் கோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி பி.சதாசிவம், சுப்ரீம் கோர்ட் முன்னாள் நீதிபதிகள் இப்ராஹிம் கலிபுல்லா, இந்திரா பானர்ஜி, சென்னை ஐகோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி தஹில் ரமானி, ஓய்வு பெற்ற நீதிபதி கே.என். பாஷா மற்றும் சென்னை ஐகோர்ட்டில் தற்போது பதவி வகிக்கும் நீதிபதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மேலும், இந்நிகழ்வில் தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, அமைச்சர்கள் துரைமுருகன், பொன்முடி, கே.என். நேரு, ரகுபதி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன் மற்றும் மத்திய, மாநில அரசு வழக்கறிஞர்கள், மூத்த வழக்கறிஞர்கள், தலைமை நீதிபதியாக பதவியேற்றுள்ள கே.ஆர்.ஸ்ரீராமின் குடும்பத்தினர் உள்ளிடோர் பங்கேற்றனர்.

சென்னை ஐகோர்ட்டின் 34-வது தலைமை நீதிபதியாக பதவியேற்றுள்ள கே.ஆர்.ஸ்ரீராம் அடுத்த ஆண்டு செப்டம்பர் 27-ம் தேதி வரை பதவி வகிப்பார்.

(கடைசி பக்கம் பார்க்க)

### நாமக்கல் அருகே சினிமா பாணியில் சம்பவம்:

# வடமாநில கொள்ளையர்களை விரட்டி பிடித்த தமிழக போலீஸ்

## என்கவுன்டரில் ஒருவர் பலி - 6 பேர் கைது

நாமக்கல்,செப். 28-

கேரளாவில் ஏ.டி.எம்.களில் கொள்ளையடித்து தப்பிவந்த வடமாநில கும்பலை நாமக்கல் அருகே தமிழக போலீசார் விரட்டி பிடித்து கைது செய்தனர். இதில் ஒரு கொள்ளையன் போலீஸ் என்கவுன்டரில் கொல்லப்பட்டான். சினிமா பாணியில் நடந்த இந்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் அருகே வடமாநில கொள்ளைகும்பல் நேற்று பிடிபட்டது. கேரள மாநிலம் திருச்சூரில் நேற்று முன்தினம்



அடுத்தடுத்து 3 ஏ.டி.எம்.களில் வடமாநிலத்தை சேர்ந்த கொள்ளை கும்பல் கொள்ளை சம்பவத்தை அரங்கேற்றியது. இதில் 65 லட்ச ரூபாய் பணம் கொள்ளையடிக்கப்பட்டது. ஏ.டி.எம்.களில் கொள்ளையடித்துவிட்டு கொள்ளை கும்பல் ராஜஸ்தான் பதிவெண் கொண்ட கண்டெய்னர் லாரியில் தப்பிச்செல்வதாக நாமக்கல் மாவட்ட போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

தகவலின் அடிப்படையில் நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் அருகே போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது, கேரளாவில் இருந்து வந்த கண்டெய்னர் லாரி போலீசார் நிறுத்தியும் நிற்காமல் சென்றது. இதையடுத்து விரட்டி சென்ற போலீசார் கண்டெய்னர் லாரியை மடக்கி பிடித்தனர்.

பின்னர், லாரி கண்டெய்னரை திறக்க முற்பட்டபோது போலீசாரை தாக்கிவிட்டு லாரி டிரைவர் மற்றும் கண்டெய்னரில் இருந்த மற்றொரு கொள்ளையர் தப்பியோடினார். இந்த சம்பவத்தில் போலீசார் நடத்திய துப்பாக்கி சூட்டில் லாரி டிரைவரான கொள்ளையன் உயிரிழந்தான். இந்த சம்பவம் தொடர்பாக சேலம் சரக டிஜிபி உமா நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது,

கேரள கொள்ளை சம்பவம் தொடர்பாக போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ராஜஸ்தான் பதிவெண் கொண்ட லாரி சோதனையில் நிற்காமல் சென்றது. நிற்காமல் சென்றதால் போலீசார் அந்த

(கடைசி பக்கம் பார்க்க)

### தீபாவளி பண்டிகை, சத் பூஜைக்கு

# நாடு முழுவதும் 5,975 சிறப்பு ரயில்கள் இயக்கம்

## மத்திய ரயில்வே அமைச்சர் அறிவிப்பு

புதுடெல்லி, செப். 28-


தீபாவளி மற்றும் சத் பூஜை முன்னிட்டு இது வரை **5,975** சிறப்பு ரயில்களுக்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஸ்ணவ் தெரிவித்துள்ளார்.

தீபாவளிப் பண்டிகை அக்டோபர் 31-ம் தேதியும், சத் பூஜை நவம்பர் முதல் வாரத்திலும் கொண்டாடப்படவுள்ளது. இந்த பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதும் நகரப் பகுதிகளில் இருப்போர் அதிகளவில் சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொள்வார்கள். இந்த நிலையில், பண்டிகை காலத்தில் சிறப்பு ரயில்கள் குறித்து அறிவிப்பை ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஸ்ணவ் வெளியிட்டுள்ளார்.

புதுதில்லியில் வெள்ளிக்கிழமை காலை செய்தியாளர்களை சந்தித்து அஸ்வினி வைஸ்ணவ் பேசியதாவது: "பண்டிகை காலத்தை முன்னிட்டு 108 ரயில்களில் முன்பதிவில்லா பெட்டிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. தீபாவளி மற்றும் சத் பண்டிகைக்காக 12,500 பெட்டிகள் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2024-2025 நிதியாண்டில் மட்டும் இதுவரை 5,975 சிறப்பு ரயில்களுக்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் மூலம் தீபாவளி பண்டிகை காலத்தில் ஒரு கோடி மக்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல முடியும். கடந்த 2023-2024ஆம் ஆண்டில் பண்டிகை காலங்களில் மொத்தம் 4,429 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன" எனத் தெரிவித்தார்.

முன்னதாக, கடந்த 24ஆம் தேதி ராஜஸ்தான் மாநிலத்தில் கவாச் 4.0 திட்டத்தை ஆய்வு செய்த அமைச்சர் அஸ்வினி வைஸ்ணவ், நாட்டில் முதல்முறையாக சவாய் மாதோபூரில் கவாச் 4.0 திட்டத்தை தொடக்கி வைத்தார். மேலும், வரும் ஆண்டுகளில் 10 ஆயிரம் இன்ஜின்கள் மற்றும் 9 ஆயிரம் கிலோமீட்டர் கவாச் 4.0 திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் எனத் தெரிவித்தார்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
| --- | --- |
| -264.27 | -37.10 |
| பாயின்ட் 85,571.85 | பாயின்ட் 26,178.95 |



**தங்கம்**
1 சவரன் ₹56,800
1 கிராம் ₹7,100



**வெள்ளி**
1 கிலோ ₹102,000
1 கிராம் ₹102.00

**டாலர்** ₹83.70

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில்

# இந்தியா நிரந்தர உறுப்பு நாடாக இங்கிலாந்து, பிரான்ஸ் ஆதரவு

**லண்டன், செப். 28-**

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவை நிரந்தர உறுப்பு நாடாக்க வேண்டும் என இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் அறிவுறுத்தியுள்ளன.



ஐக்கிய நாடுகள் சபையில் 200 நாடுகள் அங்கம் வகித்து வருகின்றன. எனினும், பாதுகாப்பு கவுன்சிலில் 15 நாடுகள் மட்டுமே உள்ளன. அவற்றில் 5 நாடுகள் மட்டுமே வீட்டோ அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன.

மீதமுள்ள 10 நாடுகள், 2 ஆண்டுக்கு ஒரு முறை தேர்வு செய்யப்படும் தற்காலிக உறுப்பினர்களாக உள்ளன. சர்வதேச அளவில் தற்போது மிகப் பெரிய பொருளாதார நாடாக வளர்ந்து வரும் இந்தியாவை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பு நாடாக்க வேண்டும் என்று பல்வேறு நாடுகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. எனினும், சீனா இதற்கு உடன்படவில்லை.

இந்த நிலையில், பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினர் ஆவதற்கு பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், பிரிட்டன் பிரதமர் கேர் ஸ்டாமர் ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர். இது குறித்து பிரிட்டன் பிரதமர் கேர் ஸ்டாமர் கூறுகையில்,

பிரேசில், இந்தியா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக இருக்க வேண்டும். பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு இடம் அளிப்பதை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று தெரிவித்தார்.

அதே போல, பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் பேசுகையில், ஐ.நா.,வை மேலும் திறனுடையதாக மாற்ற வேண்டும். பாதுகாப்பு சபை அதிகளவு நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். ஜெர்மனி, ஜப்பான், இந்தியா மற்றும் பிரேசில் நிரந்தர உறுப்பினர்களாக இருக்க வேண்டும். பாதுகாப்பு கவுன்சிலின் பணி முறைகளில் மாற்றம், பெரிய குற்றச் செயல்களில் வீட்டோ உரிமையின் வரம்புகளை நிர்ணயிக்க வேண்டும் என கூறினார்.

# இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த வலியுறுத்தியதா ஹிஸ்புல்லா?

### ஈரான் அரசு மறுப்பு

**டெக்ரான், செப். 28-**

இஸ்ரேல் ராணுவம் ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து காசா மீது தாக்குதல் நடத்தினர். காசா மீது தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்ரேல் வடக்குப் பகுதியில் உள்ள லெபனானில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது.

அதனால் இஸ்ரேல் வடக்குப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது வீடுகளில் இருந்து வெளியேறியுள்ளனர். இந்த நிலையில்தான் கடந்த சில நாட்களுக்கு முன்னதாக வடக்குப் பகுதியில் இருந்து வெளியேறிய மக்களை மீண்டும் அதே இடத்தில் பாதுகாப்பாக குடிமயர்த்துவதுதான் இலக்கு என இஸ்ரேல் தெரிவித்தது. அந்த அறிவிப்பு வெளியான அடுத்தடுத்த நாளில் ஹிஸ்புல்லா பயன்படுத்தி வந்த பேஜர்கள், வாக்கி டாக்கிகள் வெடித்து சிதறின. அதன்பிறகு ஹிஸ்புல்லா இஸ்ரேல் மீது ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தியது. இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது.

ஹிஸ்புல்லா அமைப்பின் இரண்டு முக்கிய கமாண்டர்களை இஸ்ரேல் தாக்கி கொன்றுள்ளது. மூன்று நாட்களாக பரஸ்பர தாக்குதலில் ஈடுபட்டு வரும் நிலையில் ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல் நடத்துமாறு ஈரானை வலியுறுத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால், தற்போது அதற்கான நேரம் இல்லை என இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஈரான் மறுத்து விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே ஈரான் மண்ணில் கொல்லப்பட்டபோது, இஸ்ரேலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் சூளுரைத்திருந்தது.

கொலை செய்யப்பட்ட ஓரிரு நாளில் இஸ்ரேல் மீது 350-க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியது. அதன்பின் பெரிய அளவில் தாக்குதல் நடத்தவில்லை. இஸ்ரேல் பாதுகாப்புப்படை, ஹிஸ்புல்லா உடனான மோதல் இணையும் வகையிலான எந்தவித காரணத்தையும் ஈரானுக்கு கொடுத்து விட வேண்டாம் எனக் கூறியதாக இஸ்ரேலின் மூத்த அதிகாரிகள் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### சொத்து வரி மீண்டும் உயர்வு:

# சென்னை மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றம்

**சென்னை, செப். 28-**

சொத்து வரியை மீண்டும் உயர்த்த திட்டமிட்டு இருந்த நிலையில், அதற்கான தீர்மானம் சென்னை மாநகராட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் (பொ) ஆர். லலிதா, நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர் கடந்த 2022 ஆம் ஆண்டு மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் சொத்து வரியை உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டது. குறைந்தபட்சம் 25 சதவீதம் முதல் அதிகபட்சம் 150 சதவீதம் வரை சொத்து வரி உயர்த்தப்பட்டது.

மேலும், வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு 100 சதவீதமும், தொழிற்சாலை மற்றும் கல்வி நிலைய பயன்பாட்டு கட்டடங்களுக்கு 75 சதவீதமும் வரி உயர்த்தப்பட்டது. முன்னதாக, உயர்த்தப்பட்ட சொத்துவரி சொத்துகளின் அளவு மற்றும் மண்டலங்களைப் பொறுத்து வேறுபட்டது.

இந்த நிலையில், சென்னை மாநகராட்சி எல்லைக்கு உள்பட்ட பகுதிகளில் 6 சதவீதம் வரை சொத்து வரியினை உயர்த்தி, இன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடந்த 5-ஆம் தேதி சொத்து வரி உயர்த்துவது தொடர்பாக, உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் நகர பஞ்சாயத்து இயக்குநர் சார்பில், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், உள்ளாட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களுக்கு உத்தரவு பிறக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மாமன்ற கூட்டத்தில், பொது இடத்தில் திடக்கழிவை எரித்தால் விதிக்கப்படும் அபராதத்தை ரூ.1,000 லிருந்து ரூ.5,000 ஆக உயர்த்த முடிவு செய்ப்பட்டது. சென்னையில் பொது இடத்தில் மரக்கழிவு கொட்டினால் விதிக்கப்படும் அபராதம் ரூ.200 லிருந்து ரூ.2,000 ஆகவும், வியாபாரிகள் குப்பை தொட்டி வைக்காவிட்டால் விதிக்கப்படும் அபராதம் ரூ.100 லிருந்து 1,000 ஆகவும், மெரினா, அண்ணாநகரில் பொது இடத்தில் நிகழ்ச்சி நடத்திவிட்டு தூய்மைப்படுத்தாவிட்டால் ரூ.5000 அபராதம் விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் பொது இடத்தில் குப்பை கொட்டினால் விதிக்கப்படும் அபராதத்தை ரூ.1,000 ஆக உயர்த்த மாமன்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

# அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வர புதிய சட்டம்

### அதிபர் ஜோ பைடன் தகவல்

**வாஷிங்டன், செப். 28-**

அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வர சட்டம் கொண்டு வரப்போவதாக அதிபர் ஜோபைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் சமீப காலமாக துப்பாக்கி கலாசாரம் மிக மோசமான அளவில் அதிகரித்து வருகிறது. குறிப்பாக பள்ளிக்கூடங்களில் நடைபெறும் துப்பாக்கி சூடு சம்பவங்கள் அமெரிக்க மக்களை பெரிதும் கலக்கமடையச் செய்துள்ளது.

அமெரிக்காவில் 2024-ல் மட்டும் இதுவரை 385 துப்பாக்கி சூடு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. துப்பாக்கி வன்முறையை கட்டுப்படுத்த புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே அந்நாட்டு மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது.

சமீபத்தில் இது குறித்து பேசிய அமெரிக்க அதிபர் ஜோபைடன்,

ஒரு தேசமாக, துப்பாக்கி வன்முறையை நாம் தொடர்ந்து ஏற்றுக் கொள்ள முடியாது. இதனை கட்டுப்படுத்த கடுமையான சட்டங்களை கொண்டு வர வேண்டும் என்று கூறினார்.

கடந்த 2023-ம் ஆண்டில், அமெரிக்காவில் துப்பாக்கி சட்டத்தை கவனிக்கும் துறை துணை அதிபர் கமலா ஹாரிசிடம் ஒப்படைக்கப்பட்டது. அமெரிக்காவில் துப்பாக்கி வன்முறையைத் தடுப்பதற்கும் பள்ளிகள் மற்றும் பிற கல்வி நிறுவனங்களில் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அவர் பொறுப்பேற்றார்.

இந்த நிலையில், இன்னும் 6 வாரங்களில் அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற உள்ள சூழலில், அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வர அதிபருக்கான நிறைவேற்று அதிகாரம் மூலம் புதிய சட்டத்தை கொண்டு வரப்போவதாக ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

தொடர்ந்து ஜோ பைடன் மற்றும் கமலா ஹாரிஸ் ஆகியோர் இணைந்து செய்தியாளர்களை சந்தித்து பேசினர். அப்போது பேசிய ஜோ பைடன், அமெரிக்காவில் துப்பாக்கி வன்முறையை முடிவுக்கு கொண்டு வர, முதலில் அமெரிக்காவில் துப்பாக்கி பிரச்சினை பற்றி நாம் வெளிப்படையாக பேச வேண்டும்.

அமெரிக்கா துப்பாக்கி வன்முறையால் உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, நோய் அல்லது விபத்துகளில் உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை விட அதிகம். இது மிகவும் வேதனையானது என்று தெரிவித்தார்.

### இந்தோனேசியாவில் பயங்கரம்:

# சட்டவிரோத தங்கச்சுரங்கத்தில் நிலச்சரிவு - 15 பேர் உயிரிழப்பு

**ஜகார்த்தா, செப். 28-**

இந்தோனேசியாவின் மேற்கு சுமத்ரா மாகாணத்தில் பெய்து வரும் கனமழையால் பல பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில், வியாழக்கிழமையில் பெய்த கனமழையின் காரணமாக சோலோக் மாவட்டத்தில் சட்டவிரோதமாக செயல்பட்டு வந்த தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்தது.

மேலும், நிலச்சரிவின்போது அந்த சுரங்கத்தில் 25 பேர் வரையில் பணியில் இருந்துள்ளனர். அவர்களில் 15 பேர் நிலச்சரிவில் சிக்கி பலியாகினர். பிற தொழிலாளர்களில் 3 பேர் காயமடைந்தும், இடிபாடுகளில் சிக்கிய 7 பேரை தேடியும் வருகின்றனர். சுரங்கத்தில் இருந்த தொழிலாளர்கள், இயந்திரங்கள் ஏதுமின்றி கைகளாலேயே தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்ததாக கூறப்படுகிறது. விபத்து ஏற்பட்ட பகுதிக்கு சாலை இல்லாத காரணத்தினால் 8 மணிநேரம் ஏற வேண்டியுள்ளதாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள ராணுவத்தினர் உள்ளிட்ட மீட்புக் குழுவினர் கூறுகின்றனர்.

# தமிழகத்தில் தொடர் மின் வெட்டிற்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

### ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

**சென்னை, செப். 28-**

தமிழகத்தில் தொடர் மின்வெட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று ஓ. பன்னீர் செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் முதல்-அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வேளாண் வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும், அன்றாட வாழ்விற்கும் முக்கியமாக விளங்குவது மின்சாரம். மின்சாரம் இல்லையென்றால் பொருளாதார வளர்ச்சி இல்லை என்றிருக்கின்ற நிலையில், தமிழ்நாட்டில், குறிப்பாக சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதன் காரணமாக பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக சென்னையில் உள்ள வண்ணாரப்பேட்டை, திருவல்லிக்கேணி, சேப்பாக்கம், மயிலாப்பூர், மந்தவெளி, ராஜா அண்ணாமலைபுரம், அடையாறு, வேளச்சேரி, கோட்டூர்புரம், தரமணி, ஆயிரம் விளக்கு, கிண்டி, விருகம்பாக்கம், வளசரவாக்கம் உள்ளிட்ட பல பகுதிகளிலும், புறநகர் பகுதிகளான ராமாபுரம், பள்ளிக்கரணை, மேடவாக்கம், தாம்பரம், வண்டலூர், ஊரப்பாக்கம், கூடுவாஞ்சேரி, செம்மஞ்சேரி உள்ளிட்ட பல பகுதிகளில் அடிக்கடி மின் தடை ஏற்பட்டதன் காரணமாக, பொதுமக்களின் இயல்பான வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டது. வீட்டிலிருந்தே அலுவலகப் பணிகளை மேற்கொள்பவர்களும் கடும் நெருக்கடிக்கு ஆளாயினர்.

மின் வெட்டு காரணமாக மின் சாதனங்களை உபயோகப்படுத்த முடியாமல் பெண்களும் கடும் நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டனர். இரவிலும் இந்த மின் தடை தொடர்ந்ததால் மக்கள் தூக்கமின்றி கடும் சிரமத்திற்கு ஆளாயினர். நோய்வாய்ப்பட்டவர்கள், முதியோர், குழந்தைகள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டது.

சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் கடும் வெயில் அடிக்காத சூழ்நிலையில் மின்சாரத்தின் பயன் கடுமையாக குறைத்திருக்கும்போது, தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு மின்சாரம் கிடைக்கின்ற போது அடிக்கடி மின் வெட்டு ஏற்படுவதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இதுகுறித்து, மின்சார வாரிய அதிகாரிகளிடம் முறையிட்டால், மின் மாற்றிகள் சரியில்லை. மின் சாதனங்கள் பழுதடைந்துள்ளன என்று கூறுகிறார்கள்.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மின் கட்டணம் பன் மடங்கு உயர்ந்த நிலையில், மின்மாற்றிகள் சரியில்லை, மின் சாதனங்கள் பழுதடைந்துள்ளன என்று கூறுவது ஏற்புடையதல்ல. மின்சாரத்திலிருந்து வரும் வருமானம் கணிசமாக அதிகரித்துள்ள நிலையில், மின் கட்டமைப்பை தி.மு.க. அரசு மேற்கொள்ளாதது கடும் கண்டனத்திற்குரியது. இது தி.மு.க. அரசின் நிர்வாகத் திறமையின்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு. மின்சாரத்தின் முக்கியத்துவத்தையும், மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு, பழுதடைந்துள்ள மின்மாற்றிகள், மின் சாதனங்கள், மின் பெட்டிகள் மற்றும் இதர மின் உபகரணங்களை உடனடியாக மாற்றி தொடர் மின் வெட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று தி.மு.க. அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். என தெரிவித்துள்ளார்.

# இலக்கை அடையும் வரை தாக்குதல்: இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உறுதி

**வாஷிங்டன், செப். 28-**

ஹிஸ்புல்லா அமைப்பு ஒழிக்கப்படும் வரை இஸ்ரேல் ராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தும் என அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக தெரிவித்தார்.



லெபனானின் தலைநகரான பெய்ரூட்டின் புறநகர்ப் பகுதியை குறிவைத்து இஸ்ரேலிய விமானப் படை வான்வழித் தாக்குதல் நடத்தியதில் இருவர் உயிரிழந்தனர். 15 பேர் பலத்த காயமுற்றனர்.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க நெதன்யாகு அமெரிக்கா வந்தார். அப்போது அவர் கூறியதாவது:

உலகளாவிய போர் நிறுத்த அழைப்புகளை நாங்கள் நிராகரிக்கிறோம். வான்வழித் தாக்குதல்களை தீவிரப்படுத்த உள்ளோம். எங்கள் கொள்கை தெளிவாக உள்ளது. நாங்கள் முழு பலத்துடன் ஹிஸ்புல்லாவைத் தொடர்ந்து தாக்கி வருகிறோம்.

ஹிஸ்புல்லா அமைப்பினரின் பதுங்கும் இடங்கள் அனைத்தும் ஒழிக்கப்படும் வரை ராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தும். நாங்கள் நிறுத்த மாட்டோம். இது எங்கள் கொள்கை யாரும் தவறாக நினைக்க வேண்டாம். இவ்வாறு நெதன்யாகு தெரிவித்தார்.

**28-09-2024**




**மேஷம்:-** வீட்டில் திருட்டை தவிர்க்க விழிப்புடன் இருத்தல் அவசியம். தாயின் உடல்நிலையில் அக்கறை தேவை. காரியத்தடைகள் மற்றும் பண இழப்புகள் ஏற்படும்.

**ரிஷபம்:-** பணவரவுகள் அதிகரிப்பதால் மனதில் உற்சாகம் பிறக்கும். குழந்தைகள் பால் அன்பும், அவர்களின் முன்னேற்றத்தில் ஆர்வமும் ஏற்படும். மனைவியின் உதவிகள் மகிழ்ச்சி அளிக்கும்.

**மிதுனம்:-** குடும்பத்தாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடாது அனுசரித்து நடப்பது நல்லது. தோல்விகளைக் கண்டு துவண்டு விடாதீர்கள். தீவிரமாக முயன்றால் வெற்றி நிச்சயம்.

**கடகம்:-** படுக்கை சுகங்கள், நல்ல அதிர்ஷ்டம் என எல்லா நலன்களும் தரும் ஏற்றமிகு நாள். மனைவியை மகிழ்வித்து மகிழ்வீர்கள். வருமானம் சேரும் வளம் மிக்க நாள்.

**சிம்மம்:-** உறவுகளிடையே நல்லுறவு ஏற்படுத்த முயலவும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். வாகனங்களில் செல்கையில் வேகத்தை குறைத்து, விபத்தினைத் தவிர்க்கவும்.

**கன்னி:-** படிப்பில் வெற்றிகள் படிப்படியாய் வரும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து மகிழ்வர். பணவரவு அதிகரிக்கும். பெண்களால் இலாபம் ஏற்பட மனம் மகிழும்.

**துலாம்:-** தொழிலில் புதிய உத்வேகம் பிறக்கும். அரசு பணியில் உள்ளவர்கள் பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு.

**விருச்சிகம்:-** தெய்வ நம்பிக்கையும், பாக்கிய விருத்தியும் ஏற்படும். கோவில் திருப்பணிகள் செய்வார்கள். வாழ்க்கையின் வசந்த காலம் என்று நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**தனுசு:-** அரசு அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் பயன் பெறலாம். மனைவியின் கலகத்தால் வீட்டில் குழப்பங்கள் ஏற்படலாம். உங்கள் பொருட்களை கவனமாக பாதுகாக்கவும்.

**மகரம்:-** புதிய தொழில் பயிற்சி மற்றும் கல்வியில் தேர்ச்சி ஏற்படும். வாக்கு வன்மையால் சம்பாத்தியம் உயரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவு ஏற்படும் தன வரவால் சந்தோஷம் நிலவும்.

**கும்பம்:-** எதிர்பார்த்த தனவரவுகள் வந்து ஏற்றம் தரும். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகும். தக்க தருணத்தில் நல்ல நண்பர்களின் உதவி கிடைக்கும்.

**மீனம்:-** உங்கள் திறமை முழுக்க காட்டிச் செயல்பட்டாலும் அதிகாரிகளுக்குத் திருப்தி இருக்காது. விபத்துக்களை தவிர்க்க, வாகனங்களில் நிதானமாகச் செல்லவும்..

### 3 பேர் கொலை வழக்கில்

# 4 பேருக்கு தூக்கு தண்டனை: நெல்லை நீதிமன்றம் தீர்ப்பு

**நெல்லை, செப். 28-**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே நடந்த 3 பேர் கொலை வழக்கில் 4 பேருக்கு தூக்கு தண்டனை வழங்கி நெல்லை நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பை வழங்கியுள்ளது.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள திருவேங்கடத்தை அடுத்த உடப்பன்குளத்தில் கடந்த 2014-ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டையொட்டி ஒரு சமுதாயத்தினர், மற்றொரு சமுதாயத்தினரின் தெருவில் பட்டாசு வெடித்தனர்.

இதுதொடர்பாக ஏற்பட்ட பிரச்சனை முன்விரோதமாக மாறி கடந்த 28-5-2014 அன்று ஒருவரை மற்றொரு சமூகத்தினர் சாதி பெயரை சொல்லி திட்டியதாக புகார் எழுந்தது.

இதற்கு பழிவாங்கும் நோக்குடன் அதே ஆண்டு 1-6-2014 அன்று உடப்பன்குளம் கீழ தெருவை சேர்ந்த காளிராஜ் (வயது 55), கோவை துடியலூரை சேர்ந்த வேணுகோபால்(42), முருகன்(42) ஆகியோர் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

இந்த சம்பவத்தில் உடப்பன்குளத்தை சேர்ந்த 25 பேரை வன்கொடுமை தடுப்புச்சட்டம் உள்பட 6 பிரிவுகளில் கைது செய்தனர். வழக்கு விசாரணை நெல்லை 2-வது கூடுதல் அமர்வு நீதி மன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் கடந்த 24-ந்தேதி நீதிபதி சுரேஷ்குமார் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, பொன்னுமணி, குட்டிராஜ், குருசாமி, உலக்கன், தங்கராஜ், வேலுச்சாமி மகன் கண்ணன், பால முருகன், முத்துகிருஷ்ணன், வெளியப்பன் மகன் கண்ணன், வக்கீலான சுரேஷ் உள்ளிட்ட 11 பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

அவர்களுக்கு நேற்று முன்தினம் இரவு தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. அதில் பொன்னுமணி, குருசாமி, காளிராஜ், முத்துகிருஷ்ணன் ஆகியோருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. குட்டிராஜ், கண்ணன், மற்றொரு கண்ணன், பாலமுருகன், உலக்கன் ஆகியோருக்கு 5 ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. வெளியப்பன் மகன் கண்ணன், வக்கீல் சுரேஷ் ஆகியோருக்கு இரட்டை ஆயுள் விதிக்கப்பட்டது.

மேலும் 11 பேருக்கும் அபராதங்களும் விதித்து தீர்ப்பளித்த பின்னர் நீதிபதி சுரேஷ் குமார் பேனாவை உடைத்தார். நெல்லை கோர்ட்டில் ஏற்கனவே 2 வழக்குகளில் தூக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. தற்போது வழங்கப்பட்டுள்ளது 3-வது தூக்கு தண்டனையாகும்.

### கோவில்பட்டியில் விமான பயிற்சி நிலையம்:

# திட்ட அறிக்கை தயாரிக்க அரசு டெண்டர் அறிவிப்பு

**தூத்துக்குடி, செப். 28-**

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் விமான பயிற்சி நிலையம் அமைப்பது தொடர்பாக திட்ட அறிக்கை தயாரிக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் டெண்டர் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கோவில்பட்டியில் விமான பயிற்சி நிலையம் அமைக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் முதற்கட்ட பணிகளை தொடங்கியுள்ளது. இதற்காக பெருந்திட்ட அறிக்கை தயாரிக்கும் ஆலோசகர்களை தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் ஏற்கனவே ஆப்ரேட்டரை தேர்வு செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டது.

புதிய விமான பயிற்சி நிலையம் மூலம் விமான பயிற்சி அளிக்கும் நிறுவனங்களின் முதலீட்டையும் ஈர்க்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. விமான பயிற்சி நிறுவனம் தொடங்க சரியான இயற்கை சூழல் கோவில்பட்டியில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### ஸ்ரீவில்லிபுத்தூர் விபத்தில் உயிரிழந்த
# 4 பேரின் குடும்பத்துக்கு தலா ரூ.2 லட்சம்: முதல்வர் உத்தரவு

**சென்னை, செப். 28-**

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே நேற்று நிகழ்ந்த விபத்தில் உயிரிழந்த 4 பேரின் குடும்பத்திற்கு தலா ரூ. 2 லட்சம் முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து வழங்க முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டம், மம்சாபுரத்தில் சிற்றுந்து கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்த 3 மாணவர்கள் உட்பட 4 பேரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், தெய்வேந்திரி கிராமம், மம்சாபுரம் முதன்மைச் சாலையில், மம்சாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் நேற்று (செப்.27) காலை 8 மணியளவில் சிற்றுந்து ஒன்று எதிர்பாராதவிதமாக கவிழ்ந்த விபத்துக்குள்ளானதில், ஸ்ரீவில்லிபுத்தூர் காந்தி நகரைச் சேர்ந்த மாடசாமி, வாசுராஜ், நிதிஷ்குமார் ஆகிய இரண்டு பள்ளி மாணவர்கள் மற்றும் சதீஷ்குமார் என்ற கல்லூரி மாணவர் ஆகிய நான்கு நபர்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியறிந்து வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அந்த அறிவிப்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# திருப்பதியில் ஒரு மாதத்திற்கு கூட்டம்-பேரணிகளுக்கு தடை
### மாவட்ட எஸ்.பி. உத்தரவு

**திருப்பதி, செப். 28-**

திருப்பதி லட்டு பிரசாதத்தில் மாட்டுக்கொழுப்பு கலந்த விவகாரம் எதிரொலியாக, அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்தலாம் என்ற சந்தேகத்தில், திருப்பதியில் பொதுக்கூட்டங்கள், பேரணிகள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் காவல் சட்டப் பிரிவு 30 அமல்படுத்தப்பட்டுள்ளது.

ஆந்திராவில் முந்தைய ஜெகன்மோகன் ஆட்சியில் திருப்பதி வெங்கடாஜலபதி கோவிலில் லட்டு பிரசாதத்தில் விலங்குகளின் கொழுப்பு கலக்கப்பட்டதாக கடந்த 18-ம் தேதியன்று முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், திருப்பதி லட்டு விவகாரத்தை தொடர்ந்து, அரசியல் கட்சித் தலைவர்கள் அதிகளவில் திருமலைக்கு தரிசனம் செய்ய வருகை தருவதால் பாதுகாப்பு கருதி, மாவட்டம் முழுவதும் காவல் சட்டப் பிரிவு 30-ஐ அமல்படுத்தி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுப்பாராயுடு உத்தரவிட்டுள்ளார்.

மேலும், அனுமதி பெறாமல் தடையை மீறி பேரணி, பொதுக் கூட்டம் நடத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# பாராளுமன்ற நிலைக்குழுவில் யார், யாருக்கு என்ன பொறுப்பு?
### முழுவிபரம் வெளியீடு

**புது டெல்லி, செப். 28-**

பாராளுமன்ற நிலைக்குழுக்களுக்கான துறைவாரியான தலைவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அதில் காங்கிரஸ் எம்.பி., ராகுல், சசிதரூர், பா.ஜ., எம்.பி., கங்கனா ரனாவத் ஆகியோருக்கு பதவி வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நிலைக்குழு தலைவர் பதவி மிக முக்கியமானது. மொத்தம் 24 துறைகளுக்கு நிலைக்குழுக்கள் உள்ளன. இந்த குழுவில் 31 எம்.பி.க்கள் உறுப்பினர்களாக இருப்பர். அதில் 21 பேரை லோக்சபா சபாநாயகரும், 10 பேரை ராஜ்யசபா தலைவரும் பரிந்துரைப்பர். அமைச்சர்கள் இக்குழுவின் உறுப்பினராக முடியாது. அதன்படி நேற்று 24 துறைகளுக்கான நிலைக்குழு தலைவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அதன் முழுவிபரம் வருமாறு:

லோக்சபா எதிர்க்கட்சி தலைவர் ராகுலுக்கு பாதுகாப்பு நிலைக்குழுவில் உறுப்பினராக இடம் அளிக்கப்பட்டுள்ளது. வெளியுறவு துறை நிலைக்குழு தலைவராக காங்கிரசின் சசிதரூர், கல்வி, பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் விளையாட்டு தொடர்பான நிலைக் குழு தலைவராக காங்கிரஸ் மூத்த தலைவர் திக்விஜய் சிங், விவசாயம், கால்நடை பராமரிப்பு மற்றும் உணவு பதப்படுத்துதல் தொடர்பான நிலைக்குழு தலைவராக பஞ்சாப் முன்னாள் முதல்வர் சரண்ஜித் சிங் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒடிசா எம்.பி சப்தகிரி சங்கர் கிராமப்புற மற்றும் பஞ்சாயத்து தொடர்பான நிலைக் குழு தலைவராகவும், பா.ஜ., வின் ராதா மோகன் சிங் பாதுகாப்பு குழுவின் தலைவராகவும், நிதித் துறைக்கான நிலைக்குழு தலைவராக பா.ஜ., எம்.பி., மஹ்தாப் இருப்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நிலக்கரி, சுரங்கம் மற்றும் உலோகத் துறை நிலைக்குழு தலைவராக முன்னாள் பா.ஜ.க. அமைச்சர் அனுராக் தாக்கூருக்கு வழங்கப்பட்டுள்ளது. பா.ஜ., எம்.பி., நிஷிகாந்த் துபே தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பக் குழு தலைவராக இருப்பார்.

மண்டியைச் சேர்ந்த பா.ஜ., எம்.பி., கங்கனா ரனாவத் தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப குழுவின் உறுப்பினராகவும், உள்துறை நிலைக்குழு தலைவராக பா.ஜ.வின் ராஜா மோகன் தாஸ் அகர்வாலும், எரிசக்தி மற்றும் பெட்ரோலியம் ஆகிய துறைகளுக்கான நிலைக்குழு தலைவர்களாக சிவசேனாவின் ஸ்ரீரங் அபா பர்னே மற்றும் தேசியவாத காங்கிரசின் சுனில் தட்கரே வுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறைக்கு சமாஜ்வாதி கட்சியை சேர்ந்த கோபால் யாதவ் நியமிக்கப்பட்டுள்ளார். தொழில்துறை குழுவிற்கு தி.மு.க.,வின் திருச்சி சிவா தலைமை தாங்குவார். ரயில்வே தொடர்பான குழுவுக்கு பா.ஜ.,வின் சி.எம்.ரமேஷ் தலைமை தாங்குவார். திரிணமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த கீர்த்தி ஆசாத் ரசாயனம் மற்றும் உரங்கள் தொடர்பான குழுவுக்கு தலைவராக இருப்பார். நுகர்வோர் , உணவு மற்றும் பொது விநியோகம் தொடர்பான குழுவின் தலைவராக தி.மு.க.,வின் கனிமொழி இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமலாக்கத்துறை அலுவலகத்தில் செந்தில் பாலாஜி கையெழுத்து

**சென்னை, செப். 28-**

அமலாக்கத்துறை அலுவலகத்தில் செந்தில் பாலாஜி நேற்று காலை நேரில் ஆஜராகி கையெழுத்திட்டார்.

சட்டவிரோதமாக பணம் பரிமாற்றம் செய்ததாக எழுந்த குற்றச்சாட்டில் செந்தில் பாலாஜியை கடந்த ஆண்டு ஜூன் 14-ம் தேதி அமலாக்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர். இந்த வழக்கில் செந்தில் பாலாஜிக்கு 58 முறை நீதிமன்ற காவல் நீட்டிக்கப்பட்டது. பின்னர் சுப்ரீம் கோர்ட்டில் செந்தில் பாலாஜி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஜாமீன் மனு மீதான வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அதில் செந்தில் பாலாஜிக்கு நிபந்தனை ஜாமீன் அளிக்கப்பட்டது.

அதை தொடர்ந்து கடந்த 471 நாட்களாக புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த செந்தில் பாலாஜி நேற்று முன்தினம் இரவு ஜாமீனில் வெளியே வந்தார். இந்நிலையில் சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவுப்படி நேற்று காலை நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் செந்தில் பாலாஜி நேரில் ஆஜராகி கையெழுத்திட்டார்.

# சி.பா.ஆதித்தனாரின் பணிகளை நினைவுகூர்ந்து போற்றுவோம்
### முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

**சென்னை, செப். 28-**

சி.பா.ஆதித்தனார் ஆற்றிய நற்பணிகளை நினைவு கூர்ந்து போற்றுவோம் என்று அவரது 120-வது பிறந்தநாளல் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

'தமிழர் தந்தை' சி.பா.ஆதித்தனாரின் 120-வது பிறந்த நாள் நேற்று கொண்டாடப்பட்டது. பிறந்த நாளையொட்டி, அவரது சிலைக்கு அரசியல் கட்சி தலைவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிலையில், சி. பா.ஆதித்தனாரின் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

"எளிய மக்களுக்கு உலக நடப்புகளைக் கொண்டு சென்று தமிழ் இதழியலின் முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவரும், கழக ஆட்சியில் சட்டப்பேரவைத் தலைவராகவும் அமைச்சராகவும் இருந்து அளப்பரிய சேவை புரிந்தவருமான சி.பா.ஆதித்தனார் அவர்களின் பிறந்தநாளில், அவர் ஆற்றிய நற்பணிகளை நினைவுகூர்ந்து போற்றுவோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தமிழகத்தில் தேனி, திண்டுக்கல், மதுரை
# 19 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

**சென்னை,செப். 28-**

தமிழகத்தில் இன்று தேனி, திண்டுக்கல், மதுரை, உள்ளிட்ட 19 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வுமையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது, உள் தமிழக பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இன்று 28-ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

நாளை 29-ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

வரும் 30-ம் தேதி முதல் 03-ம் தேதி வரை தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### ஆதார், பான் கார்டு விவரங்களை வெளியிட்ட
# இணையதளங்கள் முடக்கம்: மத்திய அரசு நடவடிக்கை

**புது டெல்லி, செப். 28-**

ஆதார், பான் கார்டு விவரங்களை வெளியிட்ட பல்வேறு இணையதள பக்கங்களை மத்திய அரசு முடக்கி அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய கணினி அவசர நிலை பதிலளிப்புக் குழு இணையதளப் பக்கங்களை கண்காணித்து வருகிறது.

இந்த நிலையில் மக்களின் ஆதார் மற்றும் பான் கார்டு விவரங்கள் உள்ளிட்ட முக்கியமான தனிப்பட்ட தகவல்களை சில இணையதளங்கள் வெளியிடுவது தெரியவந்தது. அவற்றின் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இது குறித்து மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்திய மக்களின் ஆதார் மற்றும் பான் கார்டு விவரங்களை வெளியிடுவதாக தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திற்கு வந்த தகவல் அடிப்படையில், பல்வேறு இணையதள பக்கங்களை முடக்கி, அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்புக்கு இணங்க, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தனிப்பட்ட விவரங்கள் கசிந்தால் அவர்கள் ஆன்லைன் மோசடிகளுக்கு ஆளாக நேரிடும். கசிந்த தகவல்களால் எந்தவொரு பாதிப்பும் ஏற்பட்டால், தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தில் அதிகாரிகளை சந்தித்து புகார் அளித்து இழப்பீடு பெறலாம். இதற்கு தகவல் தொழில்நுட்ப செயலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னை ரேஸ் கிளப் விவகாரம்: ஐகோர்ட்டில் தமிழக அரசு தகவல்

**சென்னை, செப். 28-**

சென்னை ரேஸ் கிளப் விவகாரத்தில் பேச்சுவார்த்தை நடந்து வருவதாக ஐகோர்ட்டில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

வாடகை பாக்கி 730 கோடி ரூபாயை செலுத்தவில்லை என்பதால், சென்னை ஐகோர்ட் உத்தரவின் அடிப்படையில், சென்னை ரேஸ் கிளப்புக்கு சீல் வைக்கப்பட்டது. இதையடுத்து கோர்ட்டு அளித்த உத்தரவாதத்துக்கு மாறாக, குத்தகை ரத்து செய்யப்பட்டதாக கூறி, ரேஸ் கிளப் நிர்வாகம் தரப்பில் ஐகோர்ட்டில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர் மற்றும் ராஜசேகர் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன், குத்தகை ரத்து விவகாரத்தில் தமிழக அரசுக்கும், ரேஸ் கிளப் நிர்வாகத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக தெரிவித்தார். இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், விசாரணையை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.

### குஜராத்தில் வெள்ளத்தில் சிக்கிய பேருந்து:
# தமிழகத்தை சேர்ந்த பக்தர்கள் 55 பேரும் பத்திரமாக மீட்பு

**காந்திநகர், செப். 28-**

குஜராத்தில் தொடர்ந்து பெய்த கனமழையால் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இதனால் பாப்நகர் மாவட்டத்தில் உள்ள ஆற்றில் தண்ணீர் அதிக அளவில் ஓடுகிறது.

இந்த நிலையில் தமிழகத்தை சேர்ந்த 55 பக்தர்கள் சென்ற சொகுசு பேருந்து, கோலியாக் கிராமத்தில் உள்ள தரைபாலத்தை கடக்க முயன்ற போது எதிர்பாராத விதமாக தரைப்பாலத்தின் வெள்ளத்தில் சிக்கியது.

இது குறித்து உடனடியாக பேரிடர் மீட்பு குழுவினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தமிழக பக்தர்கள் கோலியாக் கிராமத்தில் அருகில் உள்ள நிஷ்கலங்க் மகாதேவ் கோவிலுக்கு சென்று விட்டு பாவ்நகரை நோக்கி திரும்பும் போது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாக பாவ்நகர் பேரிடர் மேலாண்மைப் பிரிவு துணை மாமலதார் சதீஷ் ஜம்புச்சா தெரிவித்துள்ளார். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பாப்நகர் பேரிடர் மீட்பு படையினர் தரைப் பாலத்தின் வெள்ளத்தில் சிக்கிய சொகுசு பேருந்தில் இருந்து தமிழக பக்தர்களை டிரக் மூலமாக மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

டிரக் மூலம் பேருந்தின் அருகே சென்று, கண்ணாடியை உடைத்து பயணிகள் அனைவரையும் மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

நீண்ட நேர போராட்டத்திற்கு பிறகு, பேருந்தில் இருந்த அனைவரையும் மீட்புக் குழுவினர் பத்திரமாக மீட்டனர்.

இது குறித்து பாவ்நகர் பேரிடர் மீட்புக்குழு அதிகாரி சதீஷ் ஜாம்புஜா கூறியதாவது,

பெரு வெள்ளத்தில் சிக்கியவர்களை லாரி மூலம் மீட்புக்குழுவினர் மீட்டு உள்ளனர்.

ஆனால் அங்கு வெள்ளம் இன்னமும் வடியவில்லை. எனவே அனைவரும் அந்த லாரியில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு உள்ளனர். வெள்ளம் வடிந்த பின்னர் அவர்கள் அனைவரும் பாதுகாப்பாக அழைத்து வரப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

# சித்தராமையா மீது வழக்குப்பதிவு

**பெங்களூரு, செப். 28-**

சிறப்பு நீதிமன்ற உத்தரவின்பேரில் கர்நாடக முதல்வர் சித்தராமையா மீது லோக் ஆயுக்தா காவல் துறை வழக்குப்பதிவு செய்துள்ளது.

முடா நில முறைகேடு வழக்கில் கர்நாடக முதல்வர் சித்தராமையா மீது வழக்குப் பதிவு செய்ய ஆளுநர் ஒப்புதல் வழங்கியதையடுத்து கர்நாடக உயர்நீதிமன்றத்தில் சித்தராமையா வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கில், சித்தராமையா மீது நடவடிக்கை எடுக்கத் தடை இல்லை என்று உத்தரவிட்ட நீதிமன்றம், சித்தராமையாவின் மனுவை தள்ளுபடி செய்தது.

இதையடுத்து சித்தராமையா முதல்வர் பதவியை ராஜிநாமா செய்ய வேண்டும் என பாஜகவினர் போர்க் கொடி தூக்கியுள்ளனர். ஆனால், பதவியை ராஜிநாமா செய்ய மாட்டேன், இந்த வழக்கை சட்டரீதியாக எதிர்கொள்வேன் என சித்தராமையா கூறி வருகிறார். சித்தராமையா மீது வழக்குப்பதிவு செய்ய லோக் ஆயுக்தா சிறப்பு நீதிமன்றமும் உத்தரவிட்டுள்ளது. சிறப்பு நீதிமன்றத்தின் உத்தரவின்படி லோக் ஆயுக்தா காவல்துறையினர் நேற்று சித்தராமையா மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர். முடா முறைகேடு வழக்கில் சித்தராமையா(ஏ1), அவரது மனைவி பார்வதி(ஏ2), மைத்துனர் மல்லிகார்ஜுனசுவாமி(ஏ3) ஆகிய மூவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புனையப்பட்ட வழக்கை கண்டு எனக்கு பயமில்லை
### கர்நாடக முதல்வர் சித்தராமையா பேட்டி

**மைசூரு, செப். 28-**

எதிர்க்கட்சிகள் தான் என்னை கண்டு பயப்படுகின்றனர். அரசியல் ரீதியாக புனையப்பட்ட வழக்கை கண்டு எனக்கு பயமில்லை என்று கர்நாடக முதல்வர் சித்தராமையா கூறியுள்ளார்.

மூடா எனும் மைசூரு மேம்பாட்டு ஆணையம் சார்பில், முதல்வர் சித்தராமையாவின் மனைவி பார்வதிக்கு, 14 மனைகள் ஒதுக்கப்பட்டன. இதில், அதிகார துஷ்பிரயோகம் செய்து, முதல்வர் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது. முதல்வர் மீது விசாரணை நடத்துவதற்கு, கர்நாடக கவர்னர் தாவர்சந்த் கெலாட் அனுமதி அளித்தார். இந்த அனுமதியை ரத்து செய்ய கோரி முதல்வர் தாக்கல் செய்த வழக்கை ஐகோர்ட் தள்ளுபடி செய்தது.

மேலும், முதல்வர், அவரது மனைவி, மைத்துனர் மல்லிகார்ஜுனா, நில விற்பனையாளர் தேவராஜ் ஆகிய நால்வர் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தும்படி, மைசூரு லோக் ஆயுக்தா போலீசுக்கு, பெங்களூரு மக்கள் பிரதிநிதிகள் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது. இது தொடர்பாக மைசூரு விமான நிலையத்தில் நிருபர்களிடம் பேசிய சித்தராமையா கூறியதாவது:

பா.ஜ.க.வும் ம.ஜ.த.வும் என்னை கண்டு பயப்படுகின்றன. இதனால் தான் என்னை மீண்டும் மீண்டும் குறி வைக்கின்றனர். இந்த வழக்கு அரசியல் ரீதியில் புனையப்பட்டது. எனக்கு பயம் ஏதும் கிடையாது.

நான் எந்த தவறும் செய்யவில்லை. நான் என்ன தவறு செய்தேன் என சொல்லுங்கள். பதவியை ராஜினாமா செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. எனது அரசை கவிழ்க்க வேண்டும் என்பதற்காக அனைத்தையும் செய்கின்றனர். நாங்கள் அரசியல் சாசனத்திற்கு எதிராக செயல்படவில்லை. வழக்கறிஞர் மூலம் இந்த விவகாரத்தை சட்ட ரீதியில் எதிர்கொள்வேன். லோக் ஆயுக்தாவை நாங்கள் மூடவில்லை. பா.ஜ.க.வினரால், லோட்டஸ் தாமரையை செயல்படுத்த முடியவில்லை. இதனால், எனக்கு எதிராக செயல்படுகின்றனர். பா.ஜ.க. அல்லாத அரசுகள் உள்ள மாநிலங்களில் சி.பி.ஐ., மற்றும் அமலாக்கத்துறையை மத்திய அரசு தவறாக பயன்படுத்தி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# பீகாரில் மேலும் ஒரு பாலம் இடிந்தது

**பாகல்பூர், செப். 28-**

பீகாரில் பாகல்பூர் மாவட்டத்தில் கட்டப்பட்டிருந்த சிறிய பாலம் இடிந்து விழுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் மாநிலம், பாகல்பூர் மாவட்டத்தில் உள்ள சௌகந்தி கிராமத்தில் பிர்பவுட்டி-பாபுபூர் பகுதியை பக்கர்பூர் சாலையுடன் இணைக்கும் வகையில் சிறிய பாலம் அமைந்துள்ளது. இரண்டு ஆண்டுக்கு முன்பு பொதுப்பணித் துறையால் இந்த பாலம் கட்டப்பட்டுள்ளது. இதனிடையே முஸ்தபாபூர் கிராமத்தின் அருகே ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால், பாலத்தின் தூண் ஒன்று வெள்ளிக்கிழமை காலை திடீரென இடிந்து விழுந்தது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த போலீஸார் அப்பகுதியில் போக்குவரத்தை தடுத்து நிறுத்தினர். பாகல்பூர் மாவட்ட அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆற்றில் நீர் மட்டம் அதிகமாக உயர்ந்ததால் பாலத்தின் தூண்களில் ஒன்று விழுந்தது. இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குரங்கு அம்மை: கேரளத்தில் 2-வது நபருக்கு பாதிப்பு உறுதி

**திருவனந்தபுரம், செப். 28-**

கேரளத்தில் 2-வது நபருக்கு குரங்கு அம்மை பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து கேரளம் திரும்பிய மலப்புரம் மாவட்டம் எடவன்னா பகுதியைச் சேர்ந்த 38 வயதான நபர் ஒருவருக்கு கடந்த 18-ம் தேதி குரங்கு அம்மை தொற்று இருப்பது உறுதியானது.

இதனைத் தொடர்ந்து, மேலும் ஒருவருக்கு குரங்கு அம்மை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கேரள சுகாதாரத் துறை தகவல் தெரிவித்துள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து வந்த 26 வயது இளைஞர் ஒருவரின் மாதிரிகள், ஆலப்புழாவில் உள்ள ஆய்வகத்தில் சோதனை செய்யப்பட்ட நிலையில் தொற்று உறுதியாகியுள்ளது. தனியார் மருத்துவனை ஒன்றில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இதையடுத்து கேரளத்தில் குரங்கு அம்மை பாதிப்பு இரண்டாகவும், இந்தியாவில் மூன்றாகவும் உயர்ந்துள்ளது.

குரங்கு அம்மை பாதிப்பினால் ஏற்கெனவே கேரளத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குரங்கு அம்மை பாதிப்பு பரவாமல் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.


**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



செந்தில் பாலாஜிக்கு ஆதரவாக அரசு எந்திரமே செயல்படுகிறது. அவ்வாறு இருக்கும் போது, மின்மாற்றி கொள்முதல் முறைகேடு விவகாரத்தில் நியாயம் கிடைக்காது. எனவே, மின்மாற்றி கொள்முதலில் அரசுக்கு ரூ.397 கோடி இழப்பு ஏற்பட்டது குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு தமிழ்நாடு அரசு ஆணையிட வேண்டும்.

**- அன்புமணி**




தி.மு.க. அரசின் அலட்சியப் போக்கால் சர்வதேச போதைப்பொருள் கடத்தலின் தலைநகரமாக தமிழகம் மாறும் சூழல் உருவாகியுள்ளது. தமிழகத்தில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் தொடங்கி இளைய சமுதாயத்தின் எதிர்காலத்தை சீரழிக்கும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையை அடியோடு தடுத்து நிறுத்த அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- டி.டி.வி. தினகரன்**



ஊழலின் ஊற்றுக் கண்ணாக இருக்கிற பா.ஜ.க.வினரின் புனிதர் வேடத்தை கலைக்கிற வகையில் தான் சுப்ரீம் கோர்ட் தீர்ப்புகளை வழங்கி வருகிறது. பல்வேறு ஊழலுக்கு துணை போகும் பா.ஜ.க.வினருக்கு ஒரு நீதி, எதிர்கட்சி கட்சிகளை சேர்ந்த சித்தராமையாவுக்கும், செந்தில் பாலாஜிக்கும் ஒரு நீதியா?

**- செல்வப்பெருந்தகை**



பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தின் படி வீடு கட்டும் பணிகள் முடிவுக்கு வந்து விட்டாலும், கலைஞரின் கனவு இல்லம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் வீடுகளை கட்டும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அந்த பணிகளுக்காக பணி நீக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் துறை தொழில்நுட்ப உதவியாளர்கள் அனைவரையும் மீண்டும் பணியமர்த்த வேண்டும்.

**- ராமதாஸ்**

# செந்தில் பாலாஜியை தியாகி போல முதல்வர் வரவேற்பது வெட்கக்கேடானது

## முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் சாடல்



**திண்டுக்கல், செப். 28-**

சிறைக்கு சென்று ஜாமீனில் வந்த செந்தில் பாலாஜியை சுதந்திர போராட்ட தியாகி போல ஸ்டாலின் வரவேற்பது வெட்கக்கேடானது என திண்டுக்கல் அருகே நடைபெற்ற அண்ணா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் சாடினார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி அய்யலூர் பேரூர் அ.தி.மு.க. சார்பில் காக்காயன் பட்டியில் பேறறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சி.சீனிவாசன் சிறப்புரையாற்றுகையில்,

பேறறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆர், அவருக்கு பின் அம்மா ஆகியோர் சிறப்பான ஆட்சியை தமிழக மக்களுக்கு வழங்கினார். அம்மாவின் மறைவிற்குப் பிறகு பொதுச் செயலாளர் எடப்பாடியார் முதல்வரானார். அம்மா வழியில் மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தினார். நான்கரை வருடம் சிறப்பான ஆட்சியை பொதுச் செயலாளர் எடப்பாடியார் வழங்கினார். இதனையடுத்து வந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வினர் பொய்யான வாக்குறுதிகளை அளித்து வெற்றி பெற்றனர். மிக குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் 45 இடங்களில் அ.தி.மு.க. வெற்றி வாய்ப்பை இழந்து விட்டது. அதனை பெற்றிருந்தால் மீண்டும் அ.தி.மு.க. ஆட்சியே அமைந்திருக்கும் ஸ்டாலினின். இந்த ஆட்சியை எடப்பாடியாரின் பொற்கால ஆட்சியோடு தமிழக மக்கள் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

முதல்வர் ஸ்டாலின் தொழில் முதலீடு ஈர்ப்பதற்காக நமது வரிப்பணத்தில் அமெரிக்கா சென்றார். எவ்வளவு முதலீடு கொண்டு வந்தீர்கள் என கேள்வி எழுப்பி வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டுமென்றால் டிஆர்பி ராஜா சொன்னது தான் வெள்ளை அறிக்கை என்கிறார் ஸ்டாலின். பேறறிஞர் அண்ணாவால் ஆரம்பித்த கட்சி கருணாநிதியின் குடும்ப அரசியலால் அழிக்கப்பட்டு வருகிறது. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி ஏதோ சுதந்திர போராட்டத்திற்காக போராடி தியாகம் செய்து சிறைக்கு சென்று ஜாமினில் வெளிவந்தவரைப்போல் முதல்வர் வரவேற்கிறார். முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, தங்கமணி மீது ஸ்டாலின் பொய்யான வழக்கு போட்டு உள்ளார். அது எடுபடாது.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பல கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தி.மு.க. வெற்றி பெற்றது. ஆனால் அ.தி.மு.க. தேமுதிக மற்றும் சில கட்சிகளுடன் கூட்டணி வைத்து போட்டியிட்டது. இதில் ஒரு சதவீத வாக்குகள் அதிகமாகவே பெற்றுள்ளது. காலம் கனிந்து வருகிறது. இந்த மோசமான திமுக ஆட்சி முடிவு பெற 18 அம்மாவாசை தான் உள்ளது. வரக்கூடிய சட்டமன்ற தேர்தலில் எடப்பாடியார் மீண்டும் தமிழக முதல்வராவதை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்திற்கு அய்யலூர் பேரூர் செயலாளர் ராகுல் பாபா தலைமை வகித்தார். அமைப்பு செயலாளர் மருதராஜ், மாநில இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் டாக்டர் விபிபி. பரமசிவம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தென்னம்பட்டி பழனிச்சாமி, தலைமைக் கழக பேச்சாளர் மதுர பாரதி, மாவட்ட விவசாய அணி செயலாளர் டி.சி. ராஜமோகன் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் குஜிலியம்பாறை கிழக்கு ஒன்றிய செயலாளர் மலர்வண்ணன், வடமதுரை ஒன்றிய செயலாளர்கள் தண்டாயுதம், லட்சுமணன், வடமதுரை கிழக்கு ஒன்றிய செயலாளர் பழனியம்மாள் சவடமுத்து, வேடசந்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜான் போஸ், வடமதுரை நகர செயலாளர் பாலசுப்பிரமணி, வேடசந்தூர் பேரூர் செயலாளர் பாபு சேட், எரியோடு பேரூர் செயலாளர் அறிவாளி, மாவட்ட மாணவரணி செயலாளர் ராஜேஷ் கண்ணா, மாவட்ட மாணவரணி நிர்வாகி கருப்புசாமி, விவசாய அணி செல்ல பாண்டியன், நகர அவை தலைவர் பழனியப்பன், மதுரை மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் கௌதம் பால்ராஜ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சேட்டை கார்த்தி, மாவட்ட ஓட்டுனர் அணி நிர்வாகி சண்முகசுந்தரம், மாவட்ட அம்மா பேரவை துணை செயலாளர் ஆர்பிஆர். பிரபு, மாவட்ட பாசறை இணை செயலாளர் முகமது அப்துல்லா, மாவட்ட எம் ஜி ஆர் இளைஞர் அணி இணை செயலாளர் சிவா, திண்டுக்கல் வடக்கு பகுதி இளைஞரணி இணைச் செயலாளர் முத்துப்பாண்டி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர் நிறைவாக முரளி நன்றி கூறினார்.

# அலங்காநல்லூர் : உலக சுற்றுலா தின கொண்டாட்டம்



**அலங்காநல்லூர்,செப். 28-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே குட்டிமேய்க்கிபட்டி, கீழக்கரையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கத்தில் உலக சுற்றுலா தின கொண்டாட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தார். உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு மதுரை மாவட்ட சுற்றுலா துறை மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் பாரம்பரிய கிராமிய கலை நிகழ்ச்சிகள்,பண்டைய கால வரலாற்று நினைவுச் சின்னங்கள் தோல் பாவை கூத்து,தெருக்கூத்து, தப்பாட்டம்,மாடாட்டம்,மயிலாட்டம், மானாட்டம் உள்ளிட்ட பல்வேறு கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியில் பல்வேறு கல்லூரி,பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.மேலும் இந்த நிகழ்ச்சியில் மதுரை மாவட்டம் மட்டுமன்றி பல்வேறு வெளி மாவட்டங்களில் இருந்தும் கலை நிகழ்ச்சிகளை கண்டு களிக்க வந்திருந்தனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட சுற்றுலாத்துறை அலுவலர் ஸ்ரீ பாலமுருகன் செய்திருந்தார். இதில் திமுக ஒன்றிய செயலாளர்கள் தனராஜ், பரந்தாமன், தனசேகர், மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்தையன், பாசன விவசாய சங்க துணைச் செயலாளர் அருண்குமார், இளைஞர் அணி அமைப்பாளர் சந்தன கருப்பு, தகவல் தொழில்நுட்ப பிரிவு தவசீஷ் உள்ளிட்ட பல்வேறு அமைப்பைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# முதுகுளத்தூர் அருகே புதிய நியாயவிலை கடை திறப்பு



**முதுகுளத்தூர், செப். 28-**

முதுகுளத்தூர் அருகே உள்ள கருமல் கிராமத்தில் புதிய நியாய விலை கடை திறக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வழங்கல் அலுவலர் இளங்கோ துணை பதிவாளர் (பொதுவிநியோக திட்டம்) முரளி கிருஷ்ணா வட்ட வழங்கல் அலுவலர் உமாமகேஸ்வரி கூட்டுறவு சார் பதிவாளர் திருலோகசுந்தர் ஊராட்சி மன்ற தலைவர் லிதியாள்சாந்தகுமார் ராம்கோ முன்னாள் மேலாளர் தனசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

50-வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம்:

# மடீட்சியாவின் புதிய தலைவராக ஏ.கோடீஸ்வரன் தேர்வு



**திருமங்கலம், செப். 28-**

மடீட்சியாவில் நடைபெற்ற 50வது வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் 2024-25-ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். அதில் மடீட்சியாவின் புதிய தலைவராக ஏ.கோடீஸ்வரன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மடீட்சியாவின் 50வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் மதுரை மடீட்சியா ஹாலில் முன்தினம் சிறப்புடன் நடைபெற்றது.இதனைத் தொடர்ந்து நடைபெற்ற புதிய சங்க நிர்வாகிகள் தேர்வில் 2024-25-ம் ஆண்டிற்கு மடீட்சியா தலைவராக ஏ.கோடீஸ்வரன்ரூபவ்துணைத் தலைவர்களாக ஜெ.அசோக்(1)ரூபவ்எம்.சந்திர சேகரன்(2)ரூபவ் கௌரவ செயலாளராக வி.செந்திகுமார்ரூபவ்பொருளாளராக பி.ஜே.பன்சிதர்ரூபவ் இணைச் செயலாளராக எல்.அரவிந்த் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இதையடுத்து புதிய நிர்வாகிகளுக்கு உடனடி முன்னாள் தலைவர் லட்சுமி நாராயணன் மற்றும் முன்னாள் தலைவர்கள்ரூபவ்நிர்வாகிகள்ரூபவ்உறுப்பினர்கள்ரூபவ்அலுவலர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

# கமுதியில் பாரம்பரிய சிறுதானிய ஊட்டச்சத்து உணவு போட்டி



**கமுதி, செப். 28-**

ராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் மகளிர் சுய உதவி குழுவினர்கள் தயாரித்த பாரம்பரிய சிறுதானிய உணவு போட்டி நடைபெற்றது.

கமுதியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், பாரம்பரிய சிறுதானிய ஊட்டச்சத்து உணவு போட்டி நடைபெற்றது. இந்த வாழ்வாதார இயக்கத்தில் உள்ள 53 ஊராட்சிகளை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மகளிர் சுயஉதவி குழுக்களை சார்ந்த 300-க்கும் பெண்கள் 200 வகையான சிறுதானிய உணவு வகைகள் தயாரித்து உணவு திருவிழா கண்காட்சி போல் வைத்திருந்தனர். இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் தமிழ்ச்செல்வி போஸ் தலைமை தாங்கி, உணவு திருவிழா போட்டியை துவக்கி வைத்தார். . மண்டல உதவி திட்ட அலுவலர் அழகப்பன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கோட்டை ராஜ், சந்திரமோகன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் எள்ளுருண்டை,வாழைப்பூ வடை, கேழ்வரகு அடை, உளுந்துகஞ்சி, சோள உப்புமா, கப்பங்கஞ்சி, குதிரைவாலி அரிசி சோறு உட்பட பல்வேறு வகையான ஊட்டச்சத்து நிறைந்த பொருட்கள்,பாரம்பரிய சிறுதானிய உணவுகளை சமைத்து கண்காட்சியில் வைத்திருந்தனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டார மேலாளர் மயில்ராஜ் செய்து அனைவரையும் வரவேற்று பேசினார்.

வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் திரவியம்,சாந்தி,மாரிமுத்து பில்லத்தியான், தமிழரசி ஆகியோர் உடனிருந்து செய்திருந்தனர். இந்த சிறுதானிய உணவு போட்டியில் நத்தம் ஊராட்சி மகளிர் குழு முதல் பரிசும்,மண்டல மாணிக்கம் மகளிர் குழு 2-ம் பரிசும்,சடையனேந்தல் மகளிர் குழு 3-ம் பரிசும் பெற்று சாதனை படைத்தனர். இந்த மூன்று குழுக்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

# அருப்புக்கோட்டை தேவாங்கர் கல்லூரியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



**அருப்புக்கோட்டை, செப். 28-**

அருப்புக்கோட்டை தேவாங்கர் கலைக் கல்லூரியில் சமூக நற்பணி மன்றத்தின் சார்பாக "சாலை பாதுகாப்பு மற்றும் சாலை விதிகள்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி இயற்பியல் துறையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் இயற்பியல் துறை இரண்டாமாண்டு மாணவி ஆதிலட்சுமி வரவேற்று பேசினார். நிகழ்ச்சியை மூன்றாமாண்டு மாணவி கோடீஸ்வரி தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் உமாராணி ஆலோசனைப்படி துறைத் தலைவர் முனைவர் மாலா தலைமை வகித்து பேசினார். இயற்பியல் துறை பேராசிரியர்கள் முனைவர் சரவணமூர்த்தி, அமுதா, முனைவர் முத்துச்செல்வி கலந்து கொண்டு சாலை விழிப்புணர்வு குறித்து பேசினர்.

நிகழ்ச்சிக்கு அருப்புக்கோட்டை நகர் போக்குவரத்து காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் பாலமுருகன் மற்றும் காவலர் ஆனந்தன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் "சாலை பாதுகாப்பு நம் கடமை என்றும், தலைகவசம் நம் உயிர் கவசம் என்றும், தலைகவசம் அணிவதன் முக்கியத்துவத்தையும் மாணவ-மாணவியர்களுக்கு எடுத்துக் காட்டுகளுடன் பேசினார். இறுதியில் மூன்றாமாண்டு மாணவர் ஜெயமுருகன் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# ஒட்டன்சத்திரம் சக்தி கல்லூரியில் வங்கி கணக்கு தொடங்கும் முகாம்

**ஒட்டன்சத்திரம், செப். 28-**

சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் முத்து நாயக்கன்பட்டி பேங்க் ஆப் இந்தியா இணைந்து நடத்திய மாணவிகளுக்கு புதிய வரவு கணக்கு தொடங்கும் முகாம் நடைபெற்றது. முத்துநாயக்கன்பட்டி வங்கியின் மேலாளர், மகேந்திரன்,உதவி மேலாளர் நந்தகுமார் ஆகியோர் மாணவிகளுக்கு புதிய வரவு கணக்கு புத்தகம் வழங்கினர். இதன் மூலம் 30 மாணவிகள் பயனடைந்தனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர். கோகிலமீ"னா, தமிழ்த் துறை மதுபாலா வேதியியல் துறை பேராசிரியர்கள் செய்திருந்தனர் .

# கள்ளிக்குடி ஒன்றியத்தில் அ.தி.மு.க செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம்

## முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார் - கே.டி.ராஜேந்திர பாலாஜி பங்கேற்பு



**திருமங்கலம், செப். 28-**

மதுரை புறநகர் மேற்கு மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றிய அ.தி.மு.க சார்பில் கட்சியின் வளர்ச்சி பணி குறித்தும் ,மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் ஆலோசனை கூட்டம் கள்ளிக்குடியில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு கள்ளிக்குடி ஒன்றிய செயலாளர்கள் வேப்பங்குளம் கண்ணன், உலகாணி ராமையா, வில்லூர் பிரபுசங்கர் ஆகியோர் தலைமை வகித்தனர்.கள்ளிக்குடி ஒன்றிய கவுன்சிலர் ஆதி (எ) ராஜா, ஒன்றிய நிர்வாகி அன்னமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். கள்ளிக்குடி யூனியன் சேர்மன் மீனாட்சி மகாலிங்கம், துணை சேர்மன் கலையரசி கண்ணன் ஆகியோர் வரவேற்றனர். இந்த கூட்டத்தில் சட்டமன்ற முன்னாள் அமைச்சர்கள் ஆர். பி.உதயகுமார், கே.டி.ராஜேந்திரபாலாஜி ஆகியோர் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசியதாவது:

அதிமுக தொண்டர்களை எதிரிகள் சாதாரணமாக எடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள் தேர்தல் காலங்களில் தான் அவர்களுக்கு புரியும். ஆளுங்கட்சியாக இருந்து எப்படி மக்களுக்கு சேவை செய்தோமோ அது போல் மக்கள் உரிமைக்காக நெஞ்சுரத்துடன் போராடி வருகிறோம். தி.மு.க.வுக்கு40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் நமது ஜீவாதார உரிமைகள் பறிக்கப்பட்டு வருகிறது. தமிழக மக்களின் பிரச்சனை தீர ஒரே வழி 2026-ல் எடப்பாடியார் தலைமையில் மீண்டும் அம்மா ஆட்சி மலர வேண்டும் என்று பேசினார். முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி பேசுகையில்:

தென் மாவட்டங்களின் எக்கு கோட்டையாக அ.தி.மு.க. உள்ளது. எடப்பாடியார் தான் தமிழகத்தை ஆள வேண்டும் என்று மக்கள் முடிவு செய்து விட்டனர்.தற்போது எந்த பணியும் தி.மு.க. ஆட்சியில் நடைபெறவில்லை, வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளில் 230 தொகுதிகளில் அ.தி.மு.க நிச்சயம் வெற்றி பெறும். அதற்கு அனைவரும் பாடுபட வேண்டும் என்று பேசினார்.

இந்த கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மகேந்திரன், தமிழரசன், மாணிக்கம், கருப்பையா, சரவணன்,தவசி,நீதிபதி, மாநில அணி நிர்வாகிகள் வெற்றி வேல், தனராஜன், புளியங்குளம் ராமகிருஷ்ணன், மாவட்ட அவை தலைவர் சி.முருகன், துணைச் செயலாளர் வக்கீல் தமிழ்ச்செல்வன், பொருளாளர் வக்கீல் திருப்பதி, துணை செயலாளர் உஷா, மாவட்ட அணி நிர்வாகிகள் தமிழழகன், ராமகிருஷ்ணன், லட்சுமி , சிங்கராஜ பாண்டியன், துரைப்பாண்டி, சரவணன்பாண்டி, காசிமாயன், மகேந்திரபாண்டி, துரைப்பாண்டி,பாஸ்கர், திருமங்கலம் ஒன்றிய செயலாளர் அன்பழகன், பொதுகுழு உறுப்பினர் சுமதி சாமிநாதன்,யூனியன் சேர்மன் லதா ஜெகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரையில் மடீட்சியா சார்பில் மாபெரும் ஐடியல் ஹோம் கண்காட்சி தொடக்கம்



**திருமங்கலம், செப். 28-**

மதுரையில் மடீட்சியா சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் ஐடியல் ஹோம் கண்காட்சியினை தமிழ்நாடு தொழில் வணிகத்துறையின் மதுரை மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் எஸ்.கணேசன் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்த ஐடியல் ஹோம் கண்காட்சியில் 75 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் வீட்டிற்கு தேவையான சமையலறை சாதனங்கள், ஆயத்த ஆடைகள், பட்டுச் சேலைகள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், பர்னிச்சர்கள், மெத்தைகள், ஜூவல்லரி, மசாலாப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், ஐம்பொன் சிலைகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

கயல் அக்ரோ ஃபுட்ஸ் நிறுவனம் சலுகை விலையில் எண்ணெய், மாவு வகைகளும், எஸ்ஆர்பி சில்க்ஸ் சிறப்பு சலுகையாக எவ்வளவு மதிப்புள்ள பட்டு புடவை வாங்கினாலும் ஒரு புடவை இலவசமாகவும் வழங்குகின்றனர். இதே போல எஸ்விஎஸ் கடலை மாவு,கணேஸ் விலாஸ் மிட்டாய், நிம்மதி மெத்தைகள், மீனாட்சி டிரேடர்ஸ் பர்னிச்சர் போன்றவை வாங்குபவர்களுக்கு சிறப்பு தள்ளுபடி வழங்குகின்றனர். மேலும் இங்கு இலவச மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சலுகை விலையில் மருந்துகளும் வழங்கப்படுகின்றன.

இந்த கண்காட்சியை காண வரும் பொதுமக்களுக்கு இலவச கூப்பன் வழங்கி தினசரி காலை, மாலை இருவேளைகளிலும் குலுக்கல் நடத்தி 13-க்கும் மேற்பட்ட பரிசுகளும், தினசரி பம்பர் பரிசுகளாக கட்டில், மெத்தை சோபா ஆகியவையும் வழங்கப்படுகின்றன. சிறுவர், சிறுமியர் கண்டு மகிழ விளையாட்டரங்கமும், அறுசுவை உணவகங்களும் இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. கண்காட்சி 29ம் தேதி வரை தினசரி காலை 11.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெறுகிறது.இந்த கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.

கண்காட்சியின் துவக்க விழாவிற்கு மடீட்சியா தலைவர் ஏ. கோடீஸ்வன் தலைமை வகித்தார். கண்காட்சித் தலைவர் எம். ராமசாமி கண்காட்சிக்கான ஏற்பாடுகளை சிறப்புடன் செய்திருந்தார்.விழாவில் சங்க நிர்வாகிகள், முன்னாள் தலைவர்கள், கமிட்டி உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். மடீட்சியா கௌரவ செயலாளர் வி.செந்திகுமார் நன்றி தெரிவித்தார்.

# அருப்புக்கோட்டையில் நகர்மன்ற உறுப்பினர்கள் சாதாரண கூட்டம்



**அருப்புக்கோட்டை, செப். 28-**

அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் நகர் மன்ற உறுப்பினர்கள் சாதாரண கூட்டம் நகர் மன்ற தலைவர் சுந்தர லட்சுமி தலைமையில் நகர மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி மற்றும் நகராட்சி ஆணையாளர் ராஜமாணிக்கம் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பேசிய நகர் மன்ற உறுப்பினர் பால சுப்பிரமணி, விருதுநகர் ரோடு வாறுகால் தூர் வாராமல் நிறைந்து உள்ளது. வாரம் ஒரு முறை கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்ய வேண்டும் என பேசினார். நகர் மன்ற உறுப்பினர் முருகானந்தம் பேசுகையில், அனைவரும் சுத்தமான குடிநீர் திட்டம் ஆரம்பித்து பல வருடங்களாக ஆகிவிட்டது. இந்த திட்டத்தை அனைத்து பகுதிகளிலும் நிறைவேற்ற வேண்டும் என பேசினார்.

மேலும் நகர் மன்ற உறுப்பினர்கள் ராமதிலகவதி, செந்திவேல், அப்துல் ரகுமான் ஆகியோர் பேசினார். நகர் மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகர் மன்ற தலைவர் உறுதி அளித்தார்.கூட்டத்தில் பிஜேபி கவுன்சிலர் முருகானந்தம் தொடர்ந்து சில கூட்டங்களுக்கு கவுன்சிலர் வரவில்லை அவர் மீது என்ன நடவடிக்கை எடுத்து உள்ளீர்கள் என்று கேட்டார். துணைத் தலைவர் பழனிச்சாமி. சட்டப்படி அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி விளக்கம் கேட்டுள்ளோம் மேலும் அவர்கள் வீட்டில் நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

பதில் வந்த பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூட்டத்தில் விவாதம் நடைபெற்றது. கூட்டத்தில் நகராட்சி அலுவலர்கள், கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.

# செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் ஐம்பெரும் விழா: ஈரோட்டில் நாளை நடக்கிறது



ஈரோடு - செப்28.

ஈரோடு மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் ஐம்பெரும் விழா நாளை 29ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணிக்கு துடுப்பதியில் உள்ள ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரியில் நடைபெற உள்ளது. விழாவிற்கு சங்க மாநில புரவலரும் மாவட்ட கௌரவ ஆலோசகருமான கே கே பாலுசாமி தலைமை தாங்குகிறார். சங்கத்தின் மாவட்ட தலைவர் என் நந்தகோபால் வரவேற்று பேசுகிறார். மாவட்ட செயலாளர் சோழா எம் ஆசைத்தம்பி முன்னிலை வகிக்கிறார். மாவட்ட பொருளாளர் கிருஷ்ணசாமி நன்றி கூறுகிறார். விழாவில் ஜெ.சுத்தானந்தன், ஆர்.ஏ.என். முத்துசாமி முதலியார், சுதந்திரப் போராட்டத்தில் கொடி காத்த தியாகி குமரன், முன்னாள் முதலமைச்சர் அண்ணாதுரை பிறந்தநாளை முன்னிட்டு திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. சங்கத்தின் மாநில தலைவர் கே பி கே செல்வராஜ் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கி பேசுகிறார். மேலும் விழாவில் சமுதாய சான்றோர்களுக்கு விருது வழங்கும் விழா, 17ஆம் நூற்றாண்டில் ஈரோட்டை ஆண்ட மன்னர் சந்திரமதி முதலியார் உருவப்படம் வெளியிட்டு விழா, சங்கத்தின் 41 ஆம் ஆண்டு விழா, போன்ற ஐம்பெரும் விழா நடைபெற உள்ளது. முன்னதாக காலை 10 மணிக்கு சிலம்பு, துடும்பு ஆட்டங்கள், வள்ளி கும்மி நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. விழாவில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென மாவட்ட தலைவர், என். நந்தகோபால் மற்றும் செயலாளர் சோழா எம் ஆசைத்தம்பி ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# ஊட்டியிலிருந்து ஈரோட்டுக்கு 2 மணி நேரத்தில் கொண்டுவரப்பட்ட சிறுநீரகம், கல்லீரல்

## அபிராமி கிட்னிகேர் மருத்துவமனையில் 2 பேருக்கு பொருத்தப்பட்டது



ஈரோடு, செப்.28-

ஈரோட்டுக்கு இருந்து மணி நேரத்தில் சிறுநீரகம், கல் கல வீரல் கொண்டுவரப்பட்டு அபிராமி கிட்னி கேர் மருத்துவமனையில் 2 பேருக்கு பொருத்தப் பட்டது. நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே உள்ள நஞ்சநாடு கிராமத்தை சேர்ந்தவர் அர்ஜூனன். தேயிலை பறிக்கும் தொழிலாளி. இவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு ஊட்டி அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். அங்கு அவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டது. அவரது குடும்பத்தினர். அர்ஜூனனின் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன் வந்தனர். இதைத்தொடர்ந்து மருத்துவ குழுவினர் அறுவை சிகிச்சை மூலம் அவரது வலர் உடல் உறுப்புகளை பிறருக்கு பொருத்தும் வகையில் பாதுகாப்பாக எடுத்தனர். அர்ஜூனனின் ஒரு சிறுநீர கம் மற்றும் கல்லீரல் ஈரோட் டில் உள்ள அபிராமி கிட்னி டன. கேர் மருத்துவமனையில் உடல் உறுப்புமாற்று அறுவை சிகிச்சைக்காக காத்திருக்கும் ஒரு பெண் உள்பட 2 நோயா ளிகளுக்கு வழங்க அனுமதிக் கப்பட்டது. நீலகிரியில் இருந்து ஈரோட் டுக்கு சாலை வழியாக வர போக்குவரத்து நெரிசல் இருந் தால், குறிப்பிட்ட நேரத்தில் உடல் உறுப்புகளை கொண்டு வர சிரமம் ஏற்படும் என்ப தால் காவல் துறையின் உதவி யுடன் உடல் உறுப்புகள் கொண்டு வரப்பட்டன. இது தொடர்பாக முன்கூட்டியே யே நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்ட போலீசாருக்கு பாதுகாப்பு வழிமுறைகள் வழங்கப்பட் டன. அதன் பேரில் போலீஸ் பாதுகாப்பு வாகன உதவியு டன் உடல் உறுப்புகள் பாது காப்பு பெட்டியில் வைக்கப் பட்டு கார் மூலம் 2 மணிநே ரத்தில் ஈரோடு கொண்டு வரப்பட்டது. அங்கு கரூரைச் சேர்ந்த பெண்ணுக்கும் உத்தரப் பிரதேசத்தை சேர்ந்த ஒருவருக்கும் உடல் உறுப்புகள் பொருத்தும் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்தது. இதுகுறித்து அபிராமி கிட் னிகேர் மருத்துவமனை சிறுநீ ரக சிறப்பு நிபுணரும், இந்திய மருத்துவ சங்க ஈரோடு மாவட்ட தலைவருமான டாக்டர் டி.சரவணன் கூறிய தாவது:-

எங்கள் மருத்துவமனையில் உறுப்பு மாற்று அறுவை சிகிச் சையை வெற்றிகரமாக செய்து உள்ளோம். இதற்கு காரண அர்ஜூனன் குடும்பத்தினருக்கும், பாதுகாப்பு பணிகளை செய்த காவல் துறையினருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்

# சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார்

கோவை, செப். 28-

டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் உலக சுற்றுச்சூழல் சுகாதார தினத்தையொட்டி சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான அதன் நீண்டகால உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது. கடந்த பல ஆண்டுகளாக சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வணிக நடைமுறைகளை உணர்வுபூர்வமாக ஏற்று அதன்படி இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. 'பூமிக்கு மரியாதை' என்ற கொள்கையின்படி, டொயோட்டா நிறுவனம் கடந்த 2015ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆறு சுற்றுச்சூழல் சவால்களை உள்ளடக்கிய 'டொயோட்டா சுற்றுச்சூழல் சவால் 2050' திட்டத்தை உலகளவில் அறிவித்தது. இதில் 3 சவால்களை உள்ளடக்கிய முதல் தொகுப்பு, இதன் உற்பத்தி நடவடிக்கைகள் உட்பட கார்பன் நடுநிலையை அடைவதில் கவனம் செலுத்துகிறது. மற்ற 3 சவால்கள் சுற்றுச்சூழலில் நேர்மறையான தாக்கத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. 'டொயோட்டா சுற்றுச்சூழல் சவால் 2050-ஐ கருத்தில் கொண்டு இந்நிறுவனம் குறிப்பிடத்தக்க சாதனைகளுடன், தயாரிப்பு மற்றும் சேவை வழங்கல்களுக்கு அப்பால் காடு வளர்ப்பு, பூர்வீக பல்லுயிர் பெருக்கம் உள்ளிட்ட இயற்கை பாதுகாப்புத் துறையிலும், தண்ணீர், மூலப்பொருட்கள் மற்றும் ஆற்றல் மேலாண்மை உள்ளிட்ட வளத்திறன் மற்றும் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாட்டு முயற்சிகள் மற்றும் பலவற்றை மேம்படுத்துதல் உள்ளிட்டவற்றில் புதுமையான தீர்வுகளைத் தொடர்ந்து வழங்குகிறது. மேலும் நிலையான வாழ்க்கையை மேம்படுத்தும் விதமாக எதிர்கால சந்ததியினர் 'இயற்கையுடன் இணக்கம்' இருப்பதை வலியுறுத்தும் வகையில் பல்வேறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. சுற்றுச்சூழலுக்கு சாதகமான பங்களிப்பில் கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல், மறுசுழற்சி அடிப்படையிலான சமூகத்தை செயல்படுத்த பணியாளர்கள், சமூகம், சப்ளையர்கள், விநியோகஸ்தர்கள், பள்ளி குழந்தைகள் இடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மேலும் கார்பன் வெளியேற்றம் இல்லாத வாகனங்களை தயாரிக்கும் வகையில் ஹைப்ரிட் எலக்ட்ரிக், பிளக்-இன் ஹைப்ரிட் எலக்ட்ரிக், ப்யூல் செல் எலக்ட்ரிக் வாகனம், பேட்டரி எலக்ட்ரிக் வாகனம் போன்றவற்றிலும் இந்நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது.

# திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேசிய பயிற்சிப்பட்டறை



திருச்செங்கோடு செப் 28-

கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)யின் இயற்பியல் துறை மற்றும் வேதியியல் துறை இணைந்து சிஎஸ்ஐஆர் நிதி உதவியுடன் அறிவுசார் சொத்துரிமைகள் மற்றும் ஸ்டாட்டப் மேலாண்மைக் குறித்த இரண்டு நாட்கள் தேசிய பயிற்சிப்பட்டறை கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தலைவர் ஆர்.சீனிவாசன், துணைத் தலைவர் கே.எஸ்.சச்சின் ஆகியோரின் வாழ்த்துக்களோடு செப்டம்பர் 26,27 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. இப்பயிற்சிபட்டறையின் முதல் நாள் தொடக்கமாக இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் ஜி.சுரேஷ்குமார் வரவேற்றார் கல்லூரி முதல்வர் முனைவர் வி.பத்மநாபன் தலைமை தாங்கி குத்துவிளக்கு ஏற்றி வைத்து அறிவுசார் சொத்துரிமையைப் பற்றி உரையாற்றினார்.

இந்திய காப்புரிமை மற்றும் வடிவமைப்பு கழகத்தின் துணைக் கட்டுப்பாட்டாளர் எ.ராசா சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு அறிவுசார் சொத்துரிமை மற்றும் காப்புரிமையின் முக்கியத்துவத்தை மாணவவர்களுக்கு எடுத்துக் கூறினார். தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவர் முனைவர் எஸ்.கே.பாலசண்முகம் அறிவுசார் சட்டப் பரிணாமங்களைப் பற்றி எடுத்துக்கூறி னார் இரண்டாம் நாள் பயிற்சிப் பட்டறையில் இந்திய காப்புரிமை மற்றும் வடிவமைப்பு கழகத்தின் துணைக்கட்டுப்பாட்டாளர் எஸ்.உதயசங்கர் பதிப்புரிமை மற்றும் புவிசார் குறியீடுகளின் வகைகளையும் அதன் முக்கியத்துவங்களையும் விளக்கினார். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தின் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் பி.ராஜேஷ்குமார் புத்தொழில் தொடங்குவதில் காப்புரிமைகளின் தேவைகளைப் பற்றி எடுத்துரைத்தார். சி எஸ் ஐ ஆர் சிஈ சி ஆர் ஐ யின் மூத்த விஞ்ஞானி முனைவர் ஏ.. பாண்டிகுமார் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் புதுமைகளை பற்றி பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வின் நிறைவாக வேதியியல் துறைத்தலைவர் முனைவர் ஆர் பி.சுரேஷ் ஜெயக்குமார் நன்றி கூறினார் இந்த

. இரண்டு நாட்கள் நடைபெற்ற தேசிய பயிற்சிப் பட்டறையில் 250 மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்

# இளம்பெண்ணிடம் ரூ.15 லட்சம் மோசடி: போலீசார் விசாரணை

ஊட்டி, செப்.28-

நீலகிரி மாவட்டம் ஊட்டியை சேர்ந்த 28 வயது இளம் பெண் ஒருவர் ஆன்லைன் மூலம் வீட்டிலிருந்து பணியாற்றும் வகையில் வேலை உள்ளதா என்று பார்த்து வந்தார். இந்த நிலையில் கடந்த 25.7.2024 அன்று வாட்சப் மூலம் அறிமுகம் இல்லாத எண்ணில் இருந்து குறுந்தகவல் வந்தது. மேலும் வேலை வாய்ப்பு இருப்பதாக கூறப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் ஓட்டல் முன்பதிவு சம்பந்தமாக அவருக்கு வேலை கொடுக்கப்பட்டது. சில நாட்கள் கழித்து குறிப்பிட்ட தொகை முதலீடு செய்தால் இரட்டிப்பு லாபம் தருவதாகவும், இதேபோல் பலருக்கும் லாபம் கொடுத்துள்ளதாகவும் மர்ம நபர்கள் ஆசை வார்த்தை கூறியுள்ளனர். இதனால் ஆரம்பத்தில் சிறிய தொகையை அந்த இளம்பெண் முதலீடு செய்து பார்த்தார். அதற்கு அவருக்கு இரட்டிப்பு பணம் வந்துள்ளது. இதனால் ஆசைப்பட்ட அவர் பல்வேறு தவணைகளாக ரூ.15,39,106 முதலீடு செய்தார். அவருக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கவில்லை. அதேபோல் முதலீடு செய்த பணமும் கிடைக்கவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த அவர் இதுகுறித்து ஊட்டி சைபர் கிரைம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். இதேபோல் ஊட்டியை சேர்ந்த ஒருவரிடம் பங்குச்சந்தை வர்த்தகம் என்று கூறி தனியார் செயலியில் முதலீடு செய்தால் லாபம் வரும் என்று ஆசை வார்த்தை காட்டி ரூ.5, 98,000 மோசடி செய்யப்பட்டது. இது குறித்த புகார்களின் பேரில் நீலகிரி கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு சவுந்தரராஜன், சைபர் கிரைம் இன்ஸ்பெக்டர் பிரவீனா தலைமையிலான போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆன்லைன் மூலம் வேலை என்று கூறி இளம் பெண்ணிடம் கடந்த 25-7-2024 அன்று புகார் பெறப்பட்டது. உடனடியாக பணத்தை மீட்க போலீசார் நடவடிக்கையில் இறங்கினர். இதுபோன்ற சம்பவங்களில் வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களை சேர்ந்த குற்றவாளிகள் கைவரிசை காட்டி இருப்பார்கள் என்பதால் ஆண்டு கணக்காகி விடும். அப்போதும் முழு தொகையையும் மீட்க முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீலகிரி சைபர் கிரைம் போலீசார் விரைந்து செயல்பட்டு இரண்டு மாதத்தில் பணம் மாற்றப்பட்ட வங்கி கணக்கில் பணத்தை முடக்கினர். இதேபோல் ரூ.5,98,000 ஏமாற்றப்பட்ட வங்கிக் கணக்கில் இருந்த ரூ.17,94,669 பணத்தையும் முடக்கியுள்ளனர். தற்போது ஓரிரு நாட்களில் அந்த பணம் மீட்கப்படும் என்று போலீசார் தெரிவித்தனர். விரைந்து செயல்பட்டு பணத்தை மீட்ட போலீசாருக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

# எஸ்பிஐ லை ப் இன்சூரன்ஸ் நிறுவனம், மிர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து பீ ஸ்பெல்பவுண்ட் துவக்கம்

கோவை, செப்.28-

இந்தியாவின் மிகவும் நம்பகமான ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான எஸ்பிஐ லை ப் இன்சூரன்ஸ் நிறுவனம், மிர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து, எஸ்பிஐ லை ப் ஸ்பெல் பீ 2024-ன் 14வது பதிப்பான 'பீ ஸ்பெல்பவுண்ட்' இன் தொடக்கத்தை பெருமையுடன் அறிவிக்கிறது. பல ஆண்டுகளாக இந்தியாவில் வடிவமைத்து, முன்னிலைப்படுத்திய ஒரு தளமாக ஸ்பெல் பீ, இந்த ஆண்டு ஒரு விரிவுபடுத்தப்பட்ட தொலைநோக்கு மற்றும் எழுத்துக் கூட்டும் திறன் திறமையின் சோதித்தலை விட மேலானதாக இருக்கும் ஒரு உறுதிமொழி ஆகியவற்றுடன் திரும்ப வருகிறது. எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாக இளம் மனதுகளை தயார்படுத்துவதன் மூலம் கற்றல், படைப்பாற்றல் மற்றும் முன்னேற்ற உணர்வைக் கொண்டாடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த போட்டியின் 14வது பதிப்பு, 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களை ஈடுபடுத்துகின்ற வகையில், 30 நகரங்கள் முழுவதிலும், 500 க்கும் மேற்பட்ட பள்ளிகளில் நடைபெறும். இந்தியா முழுவதும் முதல் 50 மாணவர்கள் தேசிய இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவார்கள். இறுதி வெற்றியாளர் 'ஸ்பெல்மாஸ்டர் ஆ ப் இந்தியா 2024' ஆக முடிசூட்டப்படுதலுடன் சிறந்த சாதனையாளர்கள் நாடு தழுவிய அங்கீகாரம் பெறுவார்கள். இந்த மதிப்புமிக்க பட்டத்திற்கும் கூடுதலாக வெற்றியாளர் ரூ. 1 லட்சம் பெரும் பரிசையும், ஹாங்காங்கின் டிஸ்னிலேண்டிற்கு ஒரு நினைவில்கொள்ளத்தக்க பயணத்தையும் பெறுவார். இந்த ஆண்டிற்கான கருப்பொருளான "பீ ஸ்பெல்பவுண்ட்!" என்பது ஒரு ஸ்லோகத்தை விட அதிகம்; இது தளத்தின் ஆழமான நோக்கத்தைப் பிரதிபலிக்கிறது. ஸ்பெல் பீ 2024 இன்னும் சிறந்த எழுத்துக் கூட்டும் திறன் கொண்டவர்களைக் கண்டுபிடிப்பதில் கவனம் செலுத்துகின்ற அதே வேளையில் அது இப்போது எதிர்காலத் தலைவர்களை வளர்ப்பதில் சம முக்கியத்துவம் அளிக்கிறது. வார்த்தைகள் வெறுமனே எழுத்துக்களை விட அதிகம்-அவை அதிகாரமளிப்பதற்கான கருவிகள் என்று எஸ்பிஐ லை ப் நம்புகிறது. இந்த தளம், கல்வி சார்ந்த சவால்களைச் சமாளிப்பதற்கும், மிக முக்கியமாக, வாழ்க்கையின் பரந்த அபிலாஷைகளுக்குச் செல்வதற்கும் அவர்களுக்கு நம்பிக்கையை அளிக்கின்ற அந்த கருவிகளைக் கொண்டு மாணவர்களை வளப்படுத்த முயல்கிறதுஎன்றார்.

## ஆண்டிகுளம் ஊராட்சியில்

# 100 நாள் வேலை உறுதி திட்ட பணியாளர்களுக்கு காசநோய் ஒழிப்பு மற்றும் புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு முகாம்



ஈரோடு செப் 28-

ஈரோடு மாவட்டம் பவானி வட்டாரம் ஆண்டிகுளம் ஊராட்சியை சேர்ந்த காடையாம்பட்டி பகுதியில் 100 நாள் வேலை உறுதித் திட்ட பணியாளர்களுக்கு காசநோய் ஒழிப்பு மற்றும் புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு முகாம் நேற்று நடைபெற்றது.

ஈரோடு மாவட்ட துணை இயக்குனர் காசநோய் மருத்துவப் பணிகள் மற்றும் மாவட்ட சுகாதார அலுவலரின் வழிகாட்டுதலின்படி நடைபெற்ற இந்த முகாமில் காசநோய் பரவும் விதம், நுரையீரல் காச நோயின் அறிகுறிகள் அதன் பாதிப்புகள், காச நோய்க்கான இலவச பரிசோதனை மற்றும் சிகிச்சை கிடைக்கும் இடங்கள், காச நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியவர்கள், புகையிலை பயன்பாடுகளினால் ஏற்படும் தீமைகள், புற்றுநோய் பாதிப்புகள், புகையிலை மற்றும் போதைப் பழக்கத்தால் ஏற்படும் இளைய சமுதாயத்தின் சீரழிவுகள், புகையிலை பயன்பாட்டினால் அதிகரித்து வரும் மரண விகிதங்கள், புகையிலை தடுப்புச் சட்டங்கள், புகையிலை மற்றும் போதை பழக்க மீட்பு ஆலோசனை, 2009 ஆம் வருடத்திற்கு முன்பு பிறந்தவர்களின் பிறப்பு சான்றிதழில் பெயர் பதிவு செய்வதற்கான அரசு வழங்கியுள்ள வாய்ப்பு குறித்தும் விளக்கமாக சுகாதார நலக்கல்வி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஈரோடு மாவட்ட துணை இயக்குனர் காசநோய் மருத்துவப் பணிகள் அலுவலக மாவட்ட நலக் கல்வியாளர் சிவகுமார், மாவட்ட சுகாதார அலுவலரின் நேர்முக உதவியாளர் மகேந்திரன், மாவட்ட புகையிலை தடுப்பு மைய சமூக சேவகர் சங்கீதா, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ராமசாமி, காசநோய் முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் செல்வம், சுகாதார ஆய்வாளர்கள் ராமகிருஷ்ணன், ரவி மற்றும் 100 நாள் வேலை உறுதி திட்ட பணியாளர்கள் 65 நபர்கள் கலந்து கொண்டனர். மேலும் அனைவருக்கும் காசநோய் ஒழிப்பு மற்றும் புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு, அனைவராலும் புகையிலை எதிர்ப்பு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

# கனரக வாகன ஓட்டுநர்களுக்கான இலவச மருத்துவ முகாம்



ஈரோடு செப் 28-

கனரக வாகன ஓட்டுனர்களுக்கான இலவச பொது மருத்துவம் மற்றும் கண் பரிசோதனை முகாம் ஈரோடு மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தில் நடந்தது.

கனரக வாகன ஓட்டுனர்கள் நல கூட்டமைப்பு, வாசன் கண் மருத்துவமனை ,கலா டெண்டல், துளசி பார்மசி ஆகியவற்றின் சார்பில் நடந்த இந்த மருத்துவ முகாமில் கனரக வாகன ஓட்டுநர்கள் மட்டுமல்லாமல் பொது மக்களும் கலந்து கொண்டு இலவசமாக பரிசோதனை செய்து கொண்டனர். ரத்த அழுத்தம் ,ரத்த சர்க்கரை, நுரையீரல் செயல்பாடு கல்லீரல் செயல்பாடு பாத உணர்ச்சி, எலும்பு வலிமை, தசையின் வலிமை, மருத்துவ ஆலோசனை உடலின் ஆக்சிஜன், உடல்நிறை குறியீடு, தசையின் செயல்பாடு உடல் திரவ நிலை, புரோட்டின் அளவு ஆகிய பரிசோதனைகள் செய்யப்பட்டன.

மேலும் இலவசமாக கண் பரிசோதனை செய்யப்பட்டு தகுதியானவர்களுக்கு இலவசமாக கண் கண்ணாடி வழங்கப்படும் என்றும் இலவசமாக கண் அறுவை சிகிச்சை செய்யப்படும் என்றும் முகாமில் தெரிவிக்கப்பட்டது. ஈரோடு மேற்கு வட்டார போக்குவரத்து அதிகாரி பதுமை நாதன் இந்த முகாமை தொடங்கி வைத்தார்

இதில் ஆய்வாளர் சுரேந்திர குமார் மற்றும் மேற்கு வட்டார போக்குவரத்து ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர் இந்த நிகழ்ச்சிக்கு இந்தியன் கனரக வாகன ஓட்டுநர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனர் டாக்டர் முத்துக்குமார் தலைமை தாங்கினார். இந்த முகாமை ஒருங்கிணைப்பு செய்த இந்தியன் கனரக வாகன ஓட்டுனர் நல கூட்டமைப்பின் தமிழ்நாடு மாநில செயலாளர் சி அசோக்குமார் கூறுகையில் கனரக வாகன ஓட்டுனர்கள் தொடர்ந்து கண் பரிசோதனை செய்ய வேண்டும். அவ்வாறு செய்வது மூலமாக விபத்துக்களை ஏற்படாமல் தடுக்க முடியும். இதற்காக இந்தியன் கனரக வாகன ஓட்டுனர்கள் நல கூட்டமைப்பு தொடர்ந்து கனரக வாகன ஓட்டுனர்கள் நலம் கருதியும் விபத்துயில்லா இந்தியாவை உருவாக்கவும் கனரக வாகன ஓட்டுனர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை முகாம்கள் நடத்தி வருகிறோம்.

இந்தத் திட்டத்திற்கு உதவி செய்த பிரிக்கால் நிறுவனத்திற்கு கனரக வாகன ஓட்டுனர்கள் சார்பாக நன்றியும் பாராட்டுக்களும் தெரியப்படுத்திக் கொள்கிறோம் என்றார். இந்த முகாமில் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்.**
**M.C.O.P.No.8/2022**

மணிகண்டன். – மனுதாரர்

– எதிர் –

1.இந்துராணி,
க/பெ.விஜயசுந்தரம்,
எண்.9–13–ஏ, கண்டியன் தெரு,
வடுகபாளையம்,
பொள்ளாச்சி தாலுக்கா,
கோயம்புத்தூர் மாவட்டம்.
2.விஜயசுந்தரம்,
த/பெ.சொக்கலிங்கம்,
எண்.9–13–ஏ, கண்டியன் தெரு,
வடுகபாளையம்,
பொள்ளாச்சி தாலுக்கா,
கோயம்புத்தூர் மாவட்டம்.
– 1, 2 எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி நம்பர் வழக்கில் மனுதாரர் சாலை விபத்தில் 14.09.2020 அன்று தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களாகிய தங்களுக்கு எதிராக மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்து அதில் மேற்படி 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களாகிய தங்களுக்கு பலமுறை அறிவிப்பு அனுப்பியும் சர்வ் ஆகாததால் சமூகம் நீதிமன்றம் பொது அறிவிப்பு மூலம் சர்வ் செய்திட உத்திரவிடப்பட்டு உள்ளதால் இந்த அறிவிப்பு கொடுக்கப்படுகிறது. மேற்படி 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களாகிய தாங்கள் சமூகம் நீதமன்றத்தில் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ வரும் 01.10.2024 அன்று காலை 10.00 மணிக்கு ஆஜராகி தங்களுக்கு ஆட்சேபணை ஏதும் இருப்பினும் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

V.ஸ்டாலின்,B.A.,B.L.,
R.பிரபாகரன், B.E.,LL.B.,
வழக்கறிஞர்கள், திருவாரூர்.

**NOTICE**

Take Notice that my client B. SIVAKUMAR has filed an application before RDO, Udhagamandalam under section 13(3)of Registration of Births and Deaths Act 1969, read with Rule 9(3) of the Tamil Nadu Registration of Births and Deaths Rules, 2000 to register the death of his grandmother namely Mrs.RUKKI @RUKKIAMMAL , Daughter of late Mr.Mallaya Gowder wife of late Mr.Mande Nanthi died on 15.06.1955 at Door No.6/199 ,Gandhikandi Village, Emerald Post, Mulligoor Panchayat, Kundah Taluk, The Nilgiris.

J.H.Maheswari, B.A.L.,LL.B.,
Advocate/Notary Public,
Udhagamandalam, The Nilgiris.



**நாகப்பட்டினம்மாவட்டகலெக்டர்அலுவலகத்தில்தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் தாட்கோ மூலம் மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டத்தின் பெரியகண்ணமங்கலம் கிராமத்தை சார்ந்த கீர்த்தனா என்பவருக்கு தாட்கோ மானியமாக ரூ.4 லட்சத்து 75 ஆயிரத்து450-க்கானகாசோலையினைகலெக்டர்ப.ஆகாஷ் வழங்கினார்.**



# ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடைபெற்றது



ஈரோடு.செப்.28-

ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்தாவது,

ஈரோடு மாவட்டத்தின் இயல்பான ஆண்டு சராசரி மழையளவு 733.44 மிமீ ஆகும். நடப்பு ஆண்டில் 26.09.2024 முடிய 384.82 மி.மீ பெய்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 89.65 அடியாகவும், 21.31 மி.கனஅடி நீர் இருப்பும் உள்ளது. நடப்பாண்டில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் விநியோகம் செய்வதற்காக நெல் விதைகள் 87 மெட்ரிக் டன்னும், சிறுதானியங்கள் 39 மெட்ரிக் டன்னும், பயறுவகைகள் 16 மெட்ரிக் டன்னும், எண்ணெய் வித்துக்கள் 43 மெட்ரிக் டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இரசாயன உரங்களான யூரியா 6652 மெட்ரிக் டன்னும், டி.எ.பி 1399 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 1827 மெட்ரிக் டன்னும் மற்றும்; காம்ப்ளக்ஸ் 11695 மெட்ரிக் டன்னும் இருப்பில் உள்ளது. நடப்பு பருவத்திற்கு தேவையான இடுபொருட்கள் போதுமான அளவு இருப்பில் உள்ளன.

2024-25-ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டமானது தேர்வு செய்யப்பட்ட 42 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டது. இந்த ஊராட்சிகளில் உள்ள தரிசு நிலங்கள் கண்டறியப்பட்டு அவற்றை சாகுபடிக்கு கொண்டுவந்து உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வேளாண் மைத் து றையின் மூலம் தரிசு நிலத்தொகுப்புகள் கண்டறியப்பட்டு அவற்றில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் பொருட்டு நிலத்தடி நீர் ஆய்வு செய்யப்பட்டு ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து, நுண்ணீர் பாசன அமைப்பை நிறுவி பயிர்சாகுபடிக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள வட்டார மற்றும் துணை வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன விவசாயிகள் இவற்றைப் பெற்று பயன் பெறலாம். மேலும் விவசாயிகளுக்கு தேவையான பூச்சிமருந்துகள் மற்றும் இரசாயன உரங்கள் போதுமான அளவு தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பி.எம்.கிசான் திட்டத்தில் ஆதார்; விபரங்களை சரிபார்த்து உறுதி செய்தால் (நமுலுஊ) மட்டுமே இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து நிதியுதவி பெற முடியும் என மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பி.எம்.கிசான் நிதி உதவி பெற்று வரும் வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைக்க வேண்டியதும் அவசியமாகும்.

இதுவரை ஆதார் எண்ணை சரிபார்த்து உறுதி செய்யாத விவசாயிகள் மற்றும் வங்கிக்கணக்குடன் ஆதார் எண்ணை இணைக்காத விவசாயிகள்; உடனடியாக அந்தந்த பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு பதிவு செய்து திட்டப்பயன்கள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்திட வேண்டுமென தெரிவித்தார்

தொடர்ந்து, கலெக்டர் , விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள், எல்.பீ.பி வாய்க்காலில் முறை வைத்து தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், விவசாயம் தவிர மற்ற பயன்பாடுகளுக்கு நீர் எடுப்பதை தடை செய்ய வேண்டும், பவானி ஆற்றில் கழிவுநீர் கலப்பதை தடை செய்ய வேண்டும், ஆகாயத்தாமரைகளை அகற்றுதல், வனப்பகுதிகளில் பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு தடை விதிக்க வேண்டும் உள்ளிட்ட 110 கோரிக்கை மனுக்களை பெற்று தொடர்புடைய அலுவலர்களிடம் வழங்கி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில்மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், வேளாண்மை இணை இயக்குநர் எஸ்.வெங்கடேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மா.சாந்தாமணி, செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்) மனோகர், துணை இயக்குநர் (தோட்டக்கலை) மரகதமணி, துணை இயக்குநர் (வேளாண்வணிகம்) வி.சி.மகாதேவன், செயலாளர் துணை இயக்குநர் (ஈரோடு விற்பனைக்குழு) சாவித்திரி, செயற்பொறியாளர், நீர்வளஆதாரத்துறை, ஈரோடு மற்றும் பவானிசாகர் அணை கோட்டம், வருவாய் துறை அலுவலர்கள், தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்கள், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய அலுவலர்கள் மற்றும் பிற துறைகளை சார்ந்த அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உலக சுற்றுலா தின விழிப்புணர்வு நடைபயணம் மற்றும் வாகன பேரணி: ஊட்டியில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்



ஊட்டி, செப்.28-

நீலகிரி மாவட்டம், ஊட்டி பழங்குடியினர் பண்பாட்டு மையத்திலிருந்து, உலக சுற்றுலா தினத்தையொட்டி, நீலகிரிஸ் ஹோட்டல் ரெஸ்டாரன்ட் அசோசியேஷன் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு நடைபயணம் மற்றும் வாகனப் பேரணியை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இப்பேரணியில் ஜெம் பார்க், மொனார்க், பிரீத்தி குரூப்ஸ், துர்கா, நஹார் குரூப்ஸ், டெக்கான் பார்க், புளூபெர்ரி உள்ளிட்ட ஹோட்டல்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள் உட்பட சுமார்

300 நபர்கள் பங்கு பெற்றனர். ஊட்டி பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் தொடங்கிய பேரணியானது சேரிங்கிராஸ், கமர்சியல்சாலை, மார்க்கெட், ஏடிசி, எட்டின்ஸ் சாலை வழியாக ஆனந்தகிரி ஒய்டபிள்யுசிஏ சென்று நிறைவு பெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் சுற்றுலாத்தளங்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அதிகபடியாக நிதிஒதுக்கீடு செய்து வருகிறார்;. ஒவ்வொரு ஆண்டும் உலக சுற்றுலா தினம் செப்டம்பர் 27-ம் நாள் கடைபிடிக்கப்படுகிறது.ஆண்டுதோறும் ஒரு கருப்பொருளை மையப்படுத்தி அதன் முக்கியத்துவத்தை உலகம் முழுவதும் பரப்பி வருகிறது. அதன்படி, இந்த ஆண்டு சுற்றுலாவும் அமைதியும் என்கிற கருப்பொருளை அறிவித்துள்ளது. மேலும் முதலமைச்சர் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2030-ம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலராக கொண்டு வர வேண்டும் என பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். அதன் ஒரு பகுதியில் நமது மாநிலத்தின் பொருளாதார பங்கில் 7 சதவீதம் சுற்றுலாவை சார்ந்துள்ளதால், சுற்றுலா கொள்கை 2023-ஐ வெளியிட்டு, அதன்படி 300 சுற்றுலாத் தளங்களை மேம்படுத்த ஆணையிட்டுள்ளார். மேலும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்;.

அதன்படி, கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.12.92 கோடி மதிப்பீட்டில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் செய்யும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பூம்புகார் கலைக்கூடத்தை ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும், பிச்சாவரம் சுற்றுலாத்தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அதேபோல், கொல்லிமலை, நீலகிரி மலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல் மலை மற்றும் தென்னிந்தியாவின் ஸ்பா என்று அழைக்கப்படும் குற்றாலம் ஆகிய மலைப்பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்கரை, திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரி உள்பட தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில், மருத்துவ சுற்றுலா, கடற்கரை சுற்றுலா, கிராமிய சுற்றுலா உள்ளிட்ட 12 சுற்றுலா பிரிவுகளில் அனைத்து சேவைகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாத்தளங்களை பொறுத்தவரை அங்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு ஏற்படுத்தி தரும் தங்கும் வசதி, அவர்களுக்கு வழங்கப்படும் மரியாதையினை பொறுத்து, சுற்றுலாபயணிகள் அவர்களது சுற்றுலா நாட்களை அதிகபடுத்துவார்கள். நமது மாவட்டத்தில் அதிகளவில் சுற்றுலாத்தளங்கள் உள்ளதால், வெளியூர் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள். சுற்றுலா பயணிகள் தொடர்ந்து வந்தால் மட்டுமே நமது மாவட்டத்தின் பொருளாதாரம் மேம்படும். எனவே, அவர்களை நல்ல மரியாதையுடன் வரவேற்க வேண்டும். நமது மாவட்டத்தில் சுற்றுலா பயணிகள் தங்கும் நாட்களில் மகிழ்ச்சியுடன் மனத்திருப்தி அடையும் வகையில் வழிநடத்த வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் காவல் காணிப்பாளர் சௌந்தராஜன், ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், மாவட்ட சுற்றுலா அலுவலர் துர்காதேவி, ஊட்டி வட்டாட்சியர் சரவணகுமார், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ், நீலகிரி ஓட்டல் ரெஸ்டாரண்ட் சங்க தலைவர் சுரேஷ் நாயர்(ஜெம்பார்க்), செயலாளர் சலீம் பாஷா( டெக்கான்பார்க்), பொருளாளர் கார்த்திக்(புளூபெர்ரி) மற்றும் சங்க உறுப்பினர்கள், ஓட்டல்களின் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் மாலையில் பூங்கா சாலையில் பல்வேறு முன்னனி ஓட்டல்களின் சார்பில் ஸ்டால்கள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு குறைந்த விலையில் உணவுகள் வழங்கப்பட்டது.

ஊட்டி படகு இல்லத்தில்

# உலக சுற்றுலா தினவிழா: விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசு வழங்கி கொண்டாட்டம்



ஊட்டி, செப். 28:

ஊட்டி படகு இல்லத்தில் நடைபெற்ற உலக சுற்றுலா தினவிழாவில் விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசு வழங்கி கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

சர்வதேச சுற்றுலா நகரமான ஊட்டிக்கு நாள்தோறும் பல ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இங்கு வரும் சுற்றுலா பயணிகள் பல்வேறு சுற்றுலா தலங்களுக்கும் செல்கின்றனர். இதனால், சுற்றுலாத்துறை சார்பில் பல்வேறு பகுதிகளிலும் சுற்றுலா தலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனை காண வெளி மாவட்டங்கள், மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வருவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். இந்நிலையில், ஆண்டு தோறும் செப்டம்பர் மாதம் 27ம் தேதி உலக சுற்றுலா தினம் கொண்டாடப்படுகிறது.

அந்த வகையில் உலக சுற்றுலா தினமான நேற்று நீலகிரி மாவட்டம் ஊட்;டியில் இயற்கை எழில் கொஞ்சும் அழகுடன் கூடிய படகு இல்லத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் மகிழ்வுடன் படகு சவாரி செய்யும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் டோனட் படகு என அழைக்கப்படும் புதுவித படகு சவாரி அறிமுகப்பட்டது. இதனை மண்டல மேலாளர் குணேஸ்வரனால் துவக்கி வைத்தார் இப்படகில் அமர்ந்து சிற்றுண்டி மற்றும் தேனீர் அருந்தி; கொண்டு ஊட்டி ஏரியின் அழகை கண்டு ரசிக்கலாம் இப்படகில் சவாரி செய்வதற்கு 5 நபர்களுக்கு ரூபாய் 1200 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது இக்கட்டணத்தில் சிற்றுண்டி மற்றும் தேனீர் இலவசமாக வழங்கப்படுகிறது.

மேலும் ஊட்டி படகு இல்லத்தில் நேற்று சுற்றுலாப் பயணிகளுக்கு சிறு சிறு போட்டிகள் மற்றும் பாட்டு இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன. அத்துடன் படகு இல்லத்திலுள்ள பொழுதுபோக்கு விளையாட்டுகள் மற்றும் சிறுவர் ரயில் ஆகியவற்றிற்கு உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு நேற்று (27 ஆம் தேதி) ஒரு நாள் மட்டும் 50 சதவீத கட்டண சலுகை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் சுற்றுலா வளர்ச்சிக்கழக மண்டல மேலாளர் குணேஸ்வரன், மாவட்ட சுற்றுலா அலுவலர் துர்கா தேவி, படகு இல்ல மேலாளர் உதயகுமார், இளைஞர் விடுதி மேலாளர் பசுபதி உட்பட பலர் கலந்து கொண்டு போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்கினர்.

# ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் இரண்டாம் பருவ மலர் அலங்காரம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு திறந்து வைத்தார்



ஊட்டி, செப்.28-

நீலகிரி மாவட்டம், ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில், இரண்டாம் பருவ மலர் அலங்காரத்தினை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேற்று (27.09.2024) பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பார்வைக்காக திறந்து வைத்து, பார்வையிட்டார்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசு தாவரவியல் பூங்கா சிறப்பு வாய்ந்த சுற்றுலாதளமாகும். இங்கு சுற்றுலா பயணிகள் பலர் தொடர்ந்து வருகை புரிந்து பார்வையிட்டு வருகிறார்கள்.

இரண்டாவது பருவ காலம் துவங்கியுள்ள நிலையில், பூங்காவில் பல்வேறு வகையான சுமார் 4.50 இலட்சம் மலர்செடிகள் கொண்டு மலர்பாத்திகள் அமைக்கப்பட்டு, தற்போது பூத்து சுற்றுலாப் பயணிகளின் கண்களுக்கு விருந்தாக காட்சி அளித்து வருகிறது.

மேலும், சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் இரண்டாம் பருவத்திற்கான 70 வகையான மலர்ச்செடிகளான டேலியா, சால்வியா, இன்காமேரிகோல்டு, பிரஞ்ச்மேரிகோல்டு, டெய்சி, காலண்டுலா, ஐரிஸ், பால்சம், சப்பனேரியா, சைக்ளமன், டெல்பினியம், லூபின், ஆந்தூரியம் போன்ற 10,000 மலர்த்தொட்டிகள் மலர்க் காட்சி திடலில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், 2,000 மலர்த்தொட்டிளைக் கொண்டு புதுப்பூங்கா புல்வெளியில், தற்பொழுது செல்போன் விளையாட்டுகளில் அதிக ஆர்வம் காட்டி வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கும் குழந்தைகளுக்கு வெளியே சென்று விளையாட விழிப்புணர்வைத் தூண்டும் வகையில் மலர்ச்செடிகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட மட்டை பந்து போன்ற வடிவமைப்புகளும் அமைக்கப்பட்டுள்ளது.

அதனையும் மாவட்ட கலெக்டர் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இம்மலர் அலங்காரத் திடல் சுற்றுலா பயணிகளுக்காக ஒரு மாத காலம் திறந்து வைக்கப்பட உள்ளது. இம்மலர் அலங்காரத்தினை சுமார் 2,00,000 சுற்றுலாப்பயணிகள் கண்டுகளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து சுற்றுலாப்பயணிகளும், பொதுமக்களும் மலர் அலங்காரத்தினை கண்டுகளிக்க வேண்டும் என தோட்டக்கலைத்துறை சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, உதவி இயக்குநர்கள் பெபிதா, அனிதா, தோட்டக்கலை அலுவலர் இலக்கியா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சர்வதேச மாநாடு



**திருச்செங்கோடு செப் 28-**

திருச்செங்கோடு கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல் துறைகளும் எம்எஸ்எம்இ தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் கோவை இணைந்து 27.09.2024 அன்று சர்வதேச மாநாட்டை நடத்தியது.

இதில் வணிகவியல் மற்றும் கணினிபயன்பாட்டியல் துறையின் தலைவரும், வணிகவியல் துறைகளின் மனும் ஆகிய முனைவர் எஸ்.மகேஸ்குமார் வரவேற்றார் வழங்கினார். கே.எஸ்.ஆர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் ர.சீனிவாசன் வாழ்த்துக்களோடு விழா தொடங்கியது.

இதில் கே.எஸ்.ஆர் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வரி முனைவர் வே.பத்மநாபன் தலைமையுரை வழங்கினார். இ.பார்த்திபன் நிர்வாக இயக்குனர் எல்இஓ டேப்ஸ் கோவை. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசினார்

அத னைத் தொ டர்ந்து சிறப்பு விருந்தினர். கோவை பழனிசாமி எம்எஸ்எம்இ பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ராஜேஷ்குமார் உலகலாவிய தொழில் போட்டியில் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி திறன் மேம்படுவதற்கான சில முக்கிய அம்சங்களைப் பற்றி எடுத்துக்கூறினார்

சிறப்பு விருந்தினர் ஈரோடு. பட்டயக்கணக்காளர் ஸ்ரீ பிரதீப் நிதிகள் பெறுவதற்கு எம்எஸ்எம்இ-க்களுக்கு இன்றைய நவீன டிஜிட்டல் முறையின் மூலம் எளிய முறையில் கடன்கள் பெறுவது பற்றியும் முதலீட்டாளர்களுடன் நேரடி தொடர்பு கொள்வதையும் மாணவர்களுக்கு விளக்கினார். . அதனைத்தொடர்ந்து முனைவர் எத்தோபியா பேராசிரியர் ஏ தமிழரசு சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் எவ்வாறு முக்கிய பங்கு வகிக்கின்றது

என்றும் மார்க்கெட்டிங் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றும் பற்றியும் போட்டியிடும் திறன்கள் வாயிலாக சவால்களை கொண்டு எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என பேசினார்

தொடர்ந்து வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் கே.விஸ்வநாதன் மற்றும் வணிகவியல் மற்றும் தொழில்முறை கணக்கியல் துறைத்தலைவர் முனைவர் கே.ரமேஷ் மாநாட்டின் முக்கிய நோக்கங்களைப் பற்றி மாணவர்கள் முன்னே உரையாற்றினார். மேலும் வணிகவியல் வங்கி மற்றும் காப்பீடு துறையின் தலைவர் முனைவர் எம்.தேவிஸ்ரீ மாநாட்டின் பல்வேறு கருத்துகளை தொகுத்து வழங்கினார். மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் கே.எஸ்.ஆர் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனையர் வே.பத்மநாபன் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தனர்.

மேலும் பல்வேறு கல்லூரியில் இருந்து சுமார் 900க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆர்வமுடன் பின்னூட்டம் அளித்தனர் வணிகவியல் துறைகளின் சார்பாக மூன்றாமாண்டு மாணவர் நன்றி கூறினார்.

# தமிழ்நாடு தொடக்க கைத்தறி விசைத்தறி நெசவாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கோரிக்கை மனு



**ஈரோடு செப்28-**

தமிழ்நாடு தொடக்க கைத்தறி விசைத்தறி நெசவாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நேற்று ஈரோடு அசோகபுரத்தில் உள்ள கைத்தறித்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில், கொடுத்திருந்த கோரிக்கை மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:-

பள்ளி சீருடை வழங்கும் திட்டத்தின் கீல், கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பாலியஸ்டர் பஞ்சு சப்ளை செய்ய தனியார் நிறுவனம் ஒன்று முதல் ரக பாலியஸ்டர் பஞ்சிற்கான விலையை பெற்று கொண்டு, மறுசுழற்சி செய்யப்பட்ட பாலியஸ்டர் பஞ்சை (பல வண்ணங்களில்) வழங்கியது. அந்த பஞ்சு மூலம், கூட்டுறவு நூற்பாலைகளில் நூல் உற்பத்தி செய்யப்பட்டு, அரசு நூல் கிடங்குக்கு அனுப்பி, நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நூல் மூலம் நெசவாளர் சங்கங்கள் டிரில், கேஸ்மென்ட் துணிகளை உற்பத்தி செய்து, கோ–ஆப் டெக்ஸ், தமிழ்நாடு பஞ்சாலை கழகங்களுக்கு அனுப்பியது.

அதை ஆய்வு செய்த அதிகாரிகள், அந்த துணியில் பட்டை வருவதாக கூறி, 13 லட்சம் மீட்டர் துணியை சங்கங்களுக்கு திரும்ப தர, கைத்தறி துறை இயக்குனர் ஆணையிட்டுள்ளார். இதனால் நெசவாளர் சங்கங்களுக்கு பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மறுசுழற்சி செய்த பாலியஸ்டர் பஞ்சை வழங்கியதுதான் உண்மையான காரணம் என ஆய்வில் தெரியவந்தது.எனவே திருப்பி தரப்பட்ட துணிகளுக்கான தொகையை, அந்த தனியார் நிறுவனத்திடம் வசூலித்து நெசவாளர் சங்கங்களை காக்க வேண்டும்.உண்மைக்கு மாறாக சங்கங்கள் மீது பழி சுமத்திய நிதித்துறை, கைத்தறி துறை செயலாளர், கோ–ஆப் டெக்ஸ் நிர்வாக இயக்குனருக்கு வரும் தவறான புகார்களை வைத்து கொண்டு, நெசவாளர் சங்கங்களை மோசமாக நடத்துவது தவறான செயல் ஆகும். இதை கைவிட வேண்டும். நெசவாளர் சங்கங்களின் உறுப்பினர்களிடம் உள்ள தறிகளில் மட்டுமே உற்பத்தி மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.இலவச வேட்டி, சேலை உற்பத்திக்கு இதுவரை நூல் வரவில்லை. இதற்கு மேல் நூல் வழங்கினால் 3 மாதத்துக்குள் உற்பத்தியை நிறைவு செய்ய இயலாது. எனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட விசைத்தறிகள், சைசிங் மில்களில் உற்பத்தி மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பனை விதைகள் நடும் பணி

**பெரம்பலூர்,செப்.28-**

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் கொத்தவாசல் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் சுற்றுச்சூழல் மன்றம் சார்பில் கொத்தவாசல் மற்றும் அருகாமை கிராமங்களில் உள்ள ஏரிகளை சுற்றிலும் 5000 பனை விதைகளை நடவு செய்யும் பணியினை பெரம்பலூர் சார் கலெக்டர் கோகுல் ஐஏஸ் கலந்து கொண்டு துவங்கி வைக்கி வைத்தார்

இந் நிகழ்வில் குன்னம் வட்டாட்சியர் கோவிந்தம்மாள் , வரகூர் வருவாய் ஆய்வாளர் சுந்தர்ராஜ் ,முதல் நிலை வருவாய் ஆய்வாளர் வெங்கடேசன், கிராம நிர்வாக அலுவலர் செல்லையா. ஊராட்சி மன்ற தலைவர் மருதாயி ஆசிரியர்கள் இளவழகன், இளமதி, முத்துக்குமார், ஜெயந்தி ,லதா , பானுப்பிரியா, எலிசபெத், செல்வகுமார், தமிழ்ச்செல்வம் மற்றும் மாணவ மாணவிகள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## இந்தியா-வங்கதேசம் மோதும் கான்பூர் டெஸ்ட்:
# மழையால் முதல் நாள் ஆட்டம் பாதியில் ரத்து

**கான்பூர், செப். 28-**

இந்தியா - வங்காளதேசம் இடையே கான்பூரில் நேற்று தொடங்கிய 2-வது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் நேற்று மழை காரணமாக பாதியில் ரத்து செய்யப்பட்டது.



**கான்பூரில் தொடக்கம்...**

வங்காளதேச கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் சென்னையில் நடந்த முதலாவது டெஸ்டில் இந்தியா 280 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்த நிலையில் இந்தியா- வங்காளதேசம் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் உள்ள கிரீன் பார்க் ஸ்டேடியத்தில் நேற்று தொடங்கியது. இந்த போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

**35 ஓவர்களில்...**

அதன்படி, வங்காளதேச அணி முதலில் பேட்டிங் செய்து வருகிறது. அந்த அணி 35 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 107 ரன்கள் அடித்திருந்தபோது போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து அங்கு மழை பெய்வதன் காரணமாக முதல் நாள் ஆட்டம் இதோடு ரத்து செய்யப்பட்டது. முஷ்பிகுர் ரஹீம் 6 ரன்களுடனும், மொமினுல் ஹக் 40 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் ஆகாஷ் தீப் 2 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.

**2-வது நாள் ஆட்டம்...**

இதனையடுத்து இன்று 2-வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது. இந்தியா சார்பில் ஆகாஷ் தீப் 2 விக்கெட்டுகளும் ரவி அஸ்வின் 1 விக்கெட்டும் எடுத்தார்கள். ஏற்கனவே இந்தத் தொடரில் இந்தியா 1-0 என முன்னிலையில் இருக்கிறது. டெஸ்ட் சாம்பியன்ஷிப் தரவரிசையில் முதலிடத்தில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### வங்கதேசம் ஸ்கோர் கார்டு

1) ஜாகிர் ஹசன் - 0.
2) ஷத்மன் இஸ்லாம் - 24.
3) நஜ்முல் ஹொசன் ஷண்டோ - 24.
4) மொமினுல் ஹக் - 40 *
5) முஷ்பிகுர் ரஹிம் - 6 *

## பனப்பாக்கத்தில் தொழிற்பூங்கா:
# இன்று அடிக்கல் நாட்டுகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

**ராணிப்பேட்டை, செப். 28-**

நெமிலியை அடுத்த பனப்பாக்கத்தில் அமைய உள்ள தொழில் பூங்காவிற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைக்கிறார்.

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி அடுத்த பனப்பாக்கத்தில் 1213 ஏக்கர் பரப்பளவில் புதியதாக தொழில் பூங்கா அமைய உள்ளது. ரூ. 9000 கோடி மதிப்பீட்டில் முன்னணி நிறுவனம் டாடா நிறுவனத்தின் கார்கள் தயாரிக்கும் ஆலை, அதனைத் தொடர்ந்துரூ.400 கோடி மதிப்பீட்டில் காலணி தொழிற்சாலையும் அமைய உள்ளது.

சிப்காட்டில் புதிதாக துவங்கப்பட உள்ள தொழில் பூங்காவை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று காலை 11 மணி அளவில் அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைக்க உள்ளார். இதற்காக தொழிற்சாலை அமையும் இடங்களில் புதிய சாலைகள், மேம்பாலம் பணிகள் அதிவேகமாக நடைபெற்று வருகிறது. மேலும் முதல்வர் வருகையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரமாக நடந்து வருகிறது.

அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் முதல்வர் மு.க.ஸ்டாலினை வரவேற்க தீவிர ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. முன்னதாக பனப்பாக்கம் சிப்காட் பகுதியில் விழா ஏற்பாடு பணிகளை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் கலெக்டர் சந்திரகலா ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

முதல்வரின் வருகையையொட்டி ராணிப்பேட்டை மாவட்டம் முழுவதும் டிரோன்கள் மற்றும் ஆளில்லாத வான் வழி வாகனங்கள் பறக்க தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி உத்தரவிட்டுள்ளார். பாதுகாப்பு காரணமாக டிரோன்கள் மற்றும் ஆளில்லாத வான்வழி வாகனங்கள் பறக்கவிடும் நபர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எஸ்.பி. கிரண் ஸ்ருதி தெரிவித்துள்ளார்.

நெமிலி அடுத்த பனப்பாக்கம் சிப்காட் பகுதியில் முதல்வர் வருகையையொட்டி 2 டிஐஜிக்கள், 4 எஸ்பிக்கள், 17 ஏடிஎஸ்பிக்கள், 34 இன்ஸ்பெக்டர்கள் உட்பட ஆயிரத்து 600 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். அதற்காக தற்போது பாதுகாப்புக்காக பேரிகார்டுகள் அமைக்கப்பட்டுள்ளது என்று போலீசார் தெரிவித்தனர். மேலும் நெமிலி அடுத்த பனப்பாக்கம் பகுதி முழுவதும் இன்று நடைபெறும் அடிக்கல் நாட்டு விழாவையொட்டி தோரணங்கள் கட்டி விழா கோலம் பூண்டுள்ளது.



டெல்லியில் இருந்து சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## டெல்லியிலிருந்து சென்னை திரும்பிய
# முதல்வர் ஸ்டாலினுடன் செந்தில் பாலாஜி சந்திப்பு

**சென்னை, செப். 28-**

டெல்லி பயணத்தை முடித்துக் கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று இரவு சென்னை திரும்பினார். அப்போது முதல்வரை முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி சந்தித்து வரவேற்றார்.

பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதற்காக டெல்லி சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், நேற்று காலை பிரதமரை சந்தித்தார். டெல்லியில் உள்ள பிரதமர் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. சுமார் 45 நிமிடங்கள் இருவரும் ஆலோசனை நடத்தினர்.

இந்த சந்திப்பின் போது, தமிழகத்திற்கு நிலுவையில் உள்ள நிதி, சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்துக்கான 2-ம் கட்ட நிதி, பள்ளிக் கல்வி சமக்ர சிக்ஷா திட்டத்துக்கு நிதி உள்ளிட்டவற்றை மத்திய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கூறி அதற்கான கோரிக்கை மனுவை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் மோடியிடம் அளித்தார்.

இந்த நிலையில் டெல்லி பயணத்தை முடித்துக் கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று இரவு சென்னை திரும்பினார். சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலினை, விமான நிலையத்தில் அமைச்சர்கள் பொன்முடி, மா.சுப்பிரமணியன், சேகர்பாபு உள்ளிட்டோர் வரவேற்றனர். அவர்களுடன் நேற்று முன்தினம் ஜாமீனில் வெளிவந்த முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியும் முதல்வரை சந்தித்து வரவேற்றார். பின்னர் அனைவரும் வரவேற்பறையில் சிறிது நேரம் ஆலோசனை நடத்தினர். அதைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பண்ணை வீட்டிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் புறப்பட்டார்.

## ஆசியாவில் அதிக டெஸ்ட் விக்கெட்:
# கும்ப்ளே சாதனையை முறியடித்த அஸ்வின்

**கான்பூர், செப். 28-**

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அனில் கும்ப்ளேவின் சாதனையை ரவிச்சந்திரன் அஸ்வின் முறியடித்துள்ளார்.

**இந்தியா முன்னிலை...**

வங்காளதேச கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதில் சென்னையில் நடந்த முதலாவது டெஸ்டில் இந்தியா 280 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்த நிலையில் இந்தியா- வங்காளதேசம் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் உள்ள கிரீன் பார்க் ஸ்டேடியத்தில் நேற்று தொடங்கியது. இந்த போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

**முதல் நாள் ஆட்டம்...**

அதன்படி, வங்காளதேச அணி முதலில் பேட்டிங் செய்தது. அந்த அணி 35 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 107 ரன்கள் அடித்திருந்தபோது போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து அங்கு மழை பெய்தது. தொடர்ந்து மழை பெய்து வந்ததால் முதல் நாள் ஆட்டம் அத்துடன் ரத்து செய்யப்பட்டது.

**ஆசியாவில் அதிக விக்கெட்...**

வங்காளதேசம் தரப்பில் ஷாண்டோ 31 ரன், ஷத்மான் இஸ்லாம் 21 ரன், ஜாகிர் ஹசன் ரன் எடுக்காமலும் அவுட் ஆகினர். முஷ்பிகுர் ரஹிம் 6 ரன்களுடனும், மொமினுல் ஹக் 40 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் ஆகாஷ் தீப் 2 விக்கெட், அஸ்வின் 1 விக்கெட் வீழ்த்தி உள்ளனர். இதனையடுத்து இன்று 2-வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது. இந்நிலையில், இந்த ஆட்டத்தில் அஸ்வின் ஒரு விக்கெட் வீழ்த்தியதன் மூலம் ஆசியாவில் அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தியவர்கள் பட்டியலில் அனில் கும்ப்ளேவின் (419 விக்கெட்) சாதனையை அஸ்வின் (420* விக்கெட்) முறியடித்துள்ளார். இந்தப் பட்டியலில் இலங்கையின் முத்தையா முரளிதரன் (612 விக்கெட்) முதல் இடத்தில் உள்ளார்.

### ஆசியாவில் அதிக விக்கெட்டுகள்:

1) முத்தையா முரளிதரன் (இலங்கை) - 612 விக்கெட்.
2) ரவிச்சந்திரன் அஸ்வின் (இந்தியா) - 420* விக்கெட்.
3) அனில் கும்ப்ளே (இந்தியா) - 419 விக்கெட்.
4) ரங்கெனா ஹெராத் (இலங்கை) - 354 விக்கெட்.
5) ஹர்பஜன் சிங் (இந்தியா) - 300 விக்கெட்.

## மாற்றுத் திறனாளிகள் குறித்த பேச்சு:
# மகாவிஷ்ணு ஜாமீன் கோரி மனு

**சென்னை, செப். 28-**

மாற்றுத் திறனாளிகளை அவமதிக்கும் வகையில் பேசிய மகாவிஷ்ணு ஜாமீன் கோரிய வழக்கில், போலீஸார் பதிலளிக்க சென்னை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பித்துள்ளது.

சென்னை சைதாப்பேட்டை அரசுப் பள்ளியில் கடந்த மாதம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பரம்பொருள் அறக்கட்டளையின் நிர்வாகியான மகாவிஷ்ணு, மாற்றுத்திறனாளிகளை அவமதிக்கும் வகையில் பேசியதாக சைதாப்பேட்டை போலீஸார் அவர் மீது வழக்குப்பதிவு செய்து அவரை கடந்த செப்.7-ம் தேதியன்று கைது செய்தனர். இந்நிலையில், தனக்கு ஜாமீன் கோரி மகாவிஷ்ணு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அதில், ''மாற்றுத் திறனாளிகளை புண்படுத்தும் வகையில் தான் பேசவில்லை என்றும், தனது பேச்சு அவர்களை புண்படுத்தியிருந்தால் அதற்காக நிபந்தனையற்ற மன்னிப்புக் கோருவதாகவும் தெரிவித்திருந்தார். மேலும், எனது பேச்சு எடிட் செய்யப்பட்டு யூடியூபில் வெளியிடப்பட்டுள்ளது. எனது முழு பேச்சையும் கேட்காமல் எனக்கு எதிராக போலீஸார் பொய் வழக்கினை பதிவு செய்துள்ளனர்.

எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் கைதானேன். போலீஸார் காவலில் எடுத்து விசாரித்த போதும் முழு ஒத்துழைப்பு வழங்கினேன். எனது அலுவலகத்தில் இருந்த ஆவணங்கள், வங்கி கணக்கு விவரங்கள், வீடியோ தொகுப்புகள் உள்ளிட்ட அனைத்தையும் போலீஸார் பறிமுதல் செய்துள்ளனர். எனவே எனக்கு ஜாமீன் வழங்க வேண்டும்'' என கோரியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை சென்னை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி ஜெ.சந்திரன் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த மனு தொடர்பாக பதிலளிக்க காவல்துறை தரப்பில் அவகாசம் கோரப்பட்டது. அதையடுத்து இந்த மனுவுக்கு போலீஸார் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை நீதிபதி வரும் அக்.3-ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

## போதைப்பொருள் நடமாட்டத்தை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்
### தமிழக அரசுக்கு இ.பி.எஸ். வலியுறுத்தல்

**சென்னை,செப். 28-**

தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டத்தை அடியோடு தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஓரிரு நாட்களுக்கு முன்பு சென்னை துறைமுகத்தில் 110 கோடி ரூபாய் மதிப்புள்ள 112 கிலோ சூடோ எபிப்ரின் என்ற போதைப் பொருளை மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர் என்ற செய்திகள் ஊடகங்களில் வந்துள்ளன.

ஆஸ்திரேலியாவுக்கு செல்ல இருந்த சரக்குப் பெட்டகம் ஒன்றை சோதனை செய்ததில் போதைப் பொருள் சிக்கியதாகவும், இந்த போதைப் பொருள் கடத்தல் சம்பந்தமாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் இருவரும், சுமார் 2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருட்களை வெளிநாடுகளுக்குக் கடத்தியதாக கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் தி.மு.க.வின் அயலக அணி நிர்வாகியாக இருந்த ஜாபர் சாதிக்கின் கூட்டாளிகள் என்றும் வலைதளங்களில் செய்திகள் வருகின்றன.

கடந்த 40 மாத தி.மு.க.ஆட்சியில் சமூக விரோத சக்திகளும், ஆளும் தரப்பினரும் பிரிக்க முடியாத அளவு ஒட்டி உறவாடுவது தமிழகத்தை தலைகுனிய வைத்துள்ளது. போதைப் பொருட்களின் கேந்திரமாக தமிழகம் மாற்றப்பட்டுள்ளதற்கு காரண கர்த்தாக்கள் யார்? சூத்ரதாரிகள் யார்? யார்? என்பது நன்கு தெரிந்திருந்தும் அவர்கள் மீது சட்டத்தின் இரும்புப்பிடி நீளாமல் ஒரு சிலரை மட்டும் மத்திய வருவாய் புலனாய்வுத் துறையினர் பிடிக்கும் மர்மம் என்ன என்று மக்கள் குழம்பிப் போயுள்ளனர்.

இனியாவது தி.மு.க. அரசு, தமிழக இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, காவல்துறை அதிகாரிகளுக்கு முழு சுதந்திரம் வழங்கி, இனி தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டத்தை அடியோடு தடுக்க அரசியல் தலையீடு இன்றி சட்டப்படி கடும் நடவடிக்கைகள் எடுக்கவும், தமிழகத்தில் இருந்து வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு கடத்தப்படும் போதைப் பொருட்களின் ஆணிவேரைக் கண்டறிந்து அவர்களை சட்டத்தின்முன் நிறுத்தி கடும் தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். தொடர்ந்து இதுபோன்ற போதைப் பொருள் கடத்தல், விற்பனை தொடர்ந்தால், தமிழக இளைஞர்கள் மட்டுமல்ல, இந்தியாவின் எதிர்காலமே பாழாகும் என்பதை நினைவில் நிறுத்தி போதைப் பொருள் கடத்தல் குற்றவாளிகள் மீது சம்பந்தப்பட்ட மத்திய, மாநில காவல்துறை அதிகாரிகள் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

## 147 ஆண்டு கால டெஸ்ட் வரலாற்றில்
# கமிந்து மெண்டிஸ் புதிய சாதனை

**காலே, செப். 28-**

147 ஆண்டு கால டெஸ்ட் வரலாற்றில் முதல் வீரராக சாதனை படைத்துள்ளார் இலங்கையை சேர்ந்த கமிந்து மெண்டிஸ்.



**3 விக்கெட்டுக்கு...**

இலங்கை - நியூசிலாந்து அணிகள் இடையிலான 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி காலே மைதானத்தில் நேற்று தொடங்கியது. இதில் 'டாஸ்' ஜெயித்த இலங்கை கேப்டன் தனஞ்ஜெயா டி சில்வா பேட்டிங்கை தேர்ந்தெடுத்தார். அதன்படி முதலில் பேட் செய்த இலங்கை அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் முதல் இன்னிங்சில் 90 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 306 ரன்கள் அடித்திருந்தது. மேத்யூஸ் 78 ரன்களுடனும், கமிந்து மெண்டிஸ் 51 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இதனையடுத்து 2-வது நாள் ஆட்டம் நேற்றஉ நடைபெற்றது.

**குசல் - கமிந்து ஜோடி...**

தொடர்ந்து பேட்டிங் செய்த இலங்கை அணி சிறப்பாக விளையாடி வருகிறது. மேத்யூஸ் 88 ரன்களிலும், டி சில்வா 44 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். இதன்பின் கைகோர்த்த குசல் மெண்டிஸ் - கமிந்து மெண்டிஸ் இணை சிறப்பாக பேட்டிங் செய்து வருகிறது. இதன் மூலம் இலங்கை அணி முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுகளை இழந்து 553 ரன்கள் குவித்துள்ளது. சதம் அடித்து அசத்திய கமிந்து 154 ரன்களுடனும், குசல் 85 ரன்களுடனும் உள்ளனர்.

**8 டெஸ்டுகளில்...**

முன்னதாக இந்த போட்டியில் சிறப்பாக விளையாடி வரும் கமிந்து மெண்டிஸ் மாபெரும் சாதனை ஒன்றை படைத்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:- கமிந்து அறிமுகம் ஆனதிலிருந்து ஒரு போட்டியின் ஏதேனும் ஒரு இன்னிங்சில் 50+ ரன்களை அடித்துள்ளார். இதன் மூலம் 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அறிமுகம் ஆனதில் இருந்து தொடர்ந்து 8 டெஸ்டுகளில் ஏதாவது ஒரு இன்னிங்சில் 50 ரன்னுக்கு மேல் எடுத்த முதல் வீரர் என்ற மாபெரும் சாதனையை அவர் படைத்துள்ளார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிவு

**சேலம், செப். 28-**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 98.03 அடியாக இருந்த நிலையில் அணைக்கு நீர்வரத்து மேலும் சரிந்துள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 98.03 அடியாக இருந்தது. அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 3 ஆயிரத்து 355 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்த நிலையில் அது நேற்று 2 ஆயிரத்து 694 கனஅடியாக குறைந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு வினாடிக்கு 700 கனஅடியும் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது அணையில் 62.31 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

## எனது அடுத்த இலக்கு:
# நீரஜ் சோப்ரா விளக்கம்

**மும்பை, செப். 28-**

அடுத்தாண்டு நடைபெறும் உலக தடகளப் போட்டிக்கு நீரஜ் சோப்ரா தயாராகி வருவதாக தெரிவித்துள்ளார்.

**மிகப்பெரிய இலக்கு...**

அரியானாவில் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் வெள்ளிக்கிழமையில் `மிஷன் ஒலிம்பிக் 2036` மாநாடு நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஒலிம்பிக் வீரர் நீரஜ் உள்பட பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியின்போது, செய்தியாளர்களிடம் நீரஜ் சோப்ரா தெரிவித்ததாவது ``அடுத்த ஒலிம்பிக் தொடங்க இன்னும் 4 ஆண்டுகள் உள்ளன. ஆகையால், அடுத்த ஆண்டுக்கான மிகப்பெரிய இலக்கு, டோக்கியோவில் நடைபெறும் உலக சாம்பியன்ஷிப் ஆகும்; அதற்கான ஏற்பாடுகளை இப்போது தொடங்குவோம்.

**டோக்கியோவில்...**

ஒலிம்பிக் போட்டியின்போது ஏற்பட்ட காயம், இப்போது நன்றாக உள்ளது. புதிய சீசனுக்கு 100 சதவீதம் உடற்தகுதியுடன் வருவேன். இனிவரும் காலங்களில், ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டிகளில் வலுவான செயல்திறனை காட்டி, பல பதக்கங்களை வெல்வோம்'' என்று கூறியுள்ளார். உலக தடகளப் போட்டிகள், டோக்கியோவில் அடுத்த ஆண்டு செப்டம்பர் 13 முதல் 21 வரை நடைபெற உள்ளன.

**டைமண்ட் லீக்கில்...**

பெல்ஜியம் நாட்டின் புரூசல்ஸ் நகரில், செப். 13, 14 ஆகிய தேதிகளில் நடைபெற்ற டைமண்ட் லீக் தொடரில், கரீபிய தீவு நாடான கிரெனடா வீரர் ஆண்டர்சன் பீட்டர்ஸ் 87.87 மீட்டர் தூரம் வீசியதன்மூலம் தங்கப் பதக்கத்தை வென்றார். ஆனால், நீரஜ் சோப்ரா 87.86 மீட்டர் தூரத்திற்கு மட்டுமே எறிந்ததால், துரதிர்ஷ்டவசமாக, வெள்ளிப் பதக்கத்துடன் இரண்டாவது இடத்தைப் பிடிக்க நேர்ந்தது. இருப்பினும், போட்டியின் போது நீரஜ் சோப்ரா காலிலும், இடுப்பிலும் உள்காயத்துடன் இந்தத் தொடரில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருப்பதி பயணம் திடீர் ரத்து:
# ஜெகன் மோகன் அறிவிப்பு

**திருப்பதி, செப். 28-**

ஆந்திராவின் முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி திருப்பதி செல்வதாக இருந்த பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் தொண்டர்களை, ஆந்திர அரசு மிரட்டுவதாக புகார் எழுந்துள்ளது. ஆந்திரா அறநிலையத்துறை சட்டம் 136ன் கீழ், இறை நம்பிக்கை படிவத்தில் கட்டாயம் கையெழுத்திட வேண்டும்னெ திருமலையில் பிளக்ஸ் பேனர்கள் வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, ஜெகன் மோகன் ரெட்டி திருப்பதி வருவதையொட்டி, பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. கூடவே 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், திருமலையில் இந்து அல்லாதவர்களுக்காக ஏராளமான இடத்தில் பேனர்களுடன் அறிவிப்பு வைக்கப்பட்டுள்ள நிலையில் ஜெகன் மோகன் ரெட்டி பேட்டி அளித்தார். இதுகுறித்து ஜெகன் மோகன் ரெட்டி கூறியதாவது:- திருப்பதி திருமலையில் பெருமாளை கும்பிட வந்தால் கைது செய்வீர்களா ? அது சட்டத்துக்கு புறம்பான செயல் என வர்ணிப்பீர்களா ? நான் முதலமைச்சராகும் முன்பு ஏழுமலையானை வழிபட்ட பின்னரே பாத யாத்திரையை தொடங்கினேன்.

என்னுடைய மதம் என்ன என்று கேட்கிறார்கள். என்னுடைய மதம் மனிதாபிமானம், அதை டிக்ளரேஷன் படிவத்தில் எழுதிக் கொள்ளுங்கள். இறைவனை சந்தித்து வழிபட கூட இந்த ஆட்சி தடை விதக்க முயற்சிக்கிறது. எனது தந்தை முதல்வராக இருந்தபோது, 5 முறை ஏழுமலையானுக்கு பட்டு வஸ்திரம் சமர்பித்தார். நானும் முதல்வராக இருந்தபோது 5 முறை ஏழுமலையானுக்கு பட்டு வஸ்திரம் சமர்பித்தேன்.

திருப்பதிக்கு நான் பயணம் மேற்கொள்ள இருந்த அதே நேரத்தில் பஜாகவினரும் திருப்பதியிலு குவிந்து வருகின்றனர். நான் வீட்டில் பைபிள் வாசிக்கிறேன். இந்து, முஸ்லீம், சீக்கியம் என அனைவரையும் நான் மதிக்கிறேன். முதல்வராக இருந்த ஒருவரையே கோயிலுக்கு அனுமதிக்க மறுத்தால், தலித்களை எவ்வாறு நடத்துவார்கள்? திருப்பதியில் 6 மாதத்திற்கு ஒரு முறை நெய் வாங்க டெண்டர் விடுவது வழக்கம். சந்திரபாபு நாயுடுவின் முந்தைய ஆட்சியில் 15 முறை டெண்டர் நிராகரிக்கப்பட்டுள்ளது. என்னுடைய ஆட்சி காலத்திலும் நெய்க்கான டெண்டர் 15 முறை நிராகரிக்கப்பட்டது. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று புதுடெல்லியில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற குழு தலைவர் சோனியா காந்தியை சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, தி.மு.க. மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு, பாராளுமன்ற குழு தலைவர் கனிமொழி ஆகியோர் உடனிருந்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, அண்மையில் காலமான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரியின் புதுடெல்லியிலுள்ள இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, சீதாராம் யெச்சூரியின் மனைவி சீமா சிஸ்டி மற்றும் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார். இச்சந்திப்பின்போது, தி.மு.க. மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு, பாராளுமன்ற குழு தலைவர் கனிமொழி எம்.பி., திருச்சி சிவா எம்.பி. ஆகியோர் உடனிருந்தனர்.

# டெல்லியில் முதல்வர்...(1-ம் பக்க தொடர்ச்சி)

நிதியில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்துக்கு, இந்தாண்டு மத்திய அரசு வழங்க வேண்டியது ரூ.2,152 கோடி. இதில், முதல் தவணை இதுவரை தமிழகத்துக்கு விடுவிக்கப்படவில்லை. இந்த திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திடாதது தான் காரணம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. தேசிய அளவிலான புதிய கல்வி கொள்கையின் பல நல்ல கூறுகளை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

காலை உணவுத்திட்டம் போன்ற மற்ற மாநிலங்களில் செயல்படுத்தப்படாத பல முன்னோடி திட்டங்களையும் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. ஆனால், தேசிய கல்விக் கொள்கையின் ஒரு விதிமுறையான, மும்மொழிக் கல்விக் கொள்கையை பின்பற்ற தமிழக அரசு ஒப்புக் கொள்ளவில்லை. எந்த ஒரு மாநிலத்திலும் மொழி திணிப்பு இருக்காது என்று தேசிய கல்விக் கொள்கை உறுதியளித்திருந்தாலும், இந்த திட்டத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அந்த சரத்து இல்லை.

எனவே, ஒப்பந்தம் திருத்தப்பட வேண்டும் என மத்திய அரசிடம் கூறிவருகிறோம். இந்த சூழலில், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படாததை காரணம் காட்டி மத்திய அரசு நிதியை விடுவிக்காததால், ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க முடியவில்லை. மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளோம். உடனடியாக இத்திட்டத்துக்கான மத்திய அரசின் நிதி அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

மூன்றாவதாக, தமிழக மீனவர்கள் சந்திக்கும் வாழ்வாதார பிரச்சினை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. நமது பாரம்பரிய மீன்பிடி பகுதிகளில் மீனவர்கள், மீன்பிடி படகுகளை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து துன்புறுத்துகின்றனர். இதுகுறித்து, பிரதமர், வெளியுறவுத் துறை அமைச்சருக்கு பல முறை வலியுறுத்தி கடிதம் எழுதியும், இந்த சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகிறது. கடந்த 7 ஆண்டுகளில் மிக அதிக எண்ணிக்கையில் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

191 மீன்பிடி படகுகள் 145 மீனவர்கள் தற்போது இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். எனவே, உடனடியாக மத்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்தி மீனவர்கள், படகுகளை விடுவிக்க வேண்டும் என்று கூறியுள்ளோம். அடுத்த மாதம் கொழும்புவில் இந்தியா- இலங்கை இடையில் நடைபெறும் கூட்டுக்குழு கூட்டத்தில் இதுகுறித்து விவாதித்து உடனடியாக தீர்வு காண வலியுறுத்தியுள்ளோம். இலங்கையில் புதிய அரசு அமைந்துள்ளது. புதிய அதிபரிடம் இந்த கோரிக்கையை மத்திய அரசு வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளோம்.

இந்த 3 முக்கிய கோரிக்கைகளையும் கவனமாக கேட்ட பிரதமர், இதுகுறித்து, கலந்தாலோசித்து முடிவெடுப்பதாக தெரிவித்துள்ளார். தமிழக மக்கள் நலன் காக்க தேவையான இந்த 3 கோரிக்கைகளை பிரதமர் நிறைவேற்றுவார் என்று நம்புகிறேன். தமிழகத்துக்கு ஏராளமான கோரிக்கைகள் உள்ளன. அவற்றை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். தொடர்ந்து வலியுறுத்துவோம். இந்த 3 கோரிக்கைகள் தொடர்பாகத்தான் 45 நிமிட சந்திப்பில் பேசப்பட்டது. எங்கள் கோரிக்கைகளை தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்கிறோம்." என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

# சீதாராம் யெச்சூரியின் குடும்பத்தினரை சந்தித்து முதல்வர் ஸ்டாலின் ஆறுதல்

புதுடெல்லி,செப்.28-

டெல்லியில் உள்ள மறைந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரியின் இல்லத்துக்கு நேரில் சென்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், யெச்சூரியின் மனைவி மற்றும் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

டெல்லி சென்றுள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அண்மையில் காலமான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரியின் புதுடெல்லியில் உள்ள இல்லத்துக்கு நேற்று நேரில் சென்று, அவரது உருவப் படத்துக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், சீதாராம் யெச்சூரியின் மனைவி சீமா சிஸ்டி மற்றும் அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார். இந்தச் சந்திப்பின்போது, திமுக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா ஆகியோர் உடனிருந்தனர்.

முன்னதாக, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். மேலும், நேற்று காலை பிரதமர் மோடியைச் சந்தித்த தமிழக முதல்வர் ஸ்டாலின், சமக்ர சிக்‌ஷ அபியான் என்ற மத்திய அரசின் கல்வித் திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு தரவேண்டிய நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும், இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு நிரந்தர தீர்வு வேண்டும், சென்னை மெட்ரோ 2-ம் கட்டப் பணிகளுக்கான நிதியை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவை பிரதமரிடம் தமிழக முதல்வர் ஸ்டாலின் அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# சென்னை ஐகோர்ட்டின் புதிய...(1-ம் பக்க தொடர்ச்சி)

கடந்த 1986-ம் ஆண்டு வழக்கறிஞராக பணியைத் தொடங்கிய கே.ஆர்.ஸ்ரீராம், கடந்த 2013-ம் ஆண்டு ஜூனில் மும்பை ஐகோர்ட் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். மும்பை பல்கலைக்கழகம் மற்றும் லண்டனில் சட்டம் பயின்ற இவர் வணிக சட்டம், சேவை வரி உள்ளிட்டவற்றில் நிபுணத்துவம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் பேசிய தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம், தமிழ்தாய்க்கு எனது முதல் வணக்கம். சகோதர, சகோரிகளுக்கு மனம் நிறைந்த நல்வாழ்த்துகள். பள்ளியில் தமிழ் படித்த நிலையில் 500-க்கும் மேற்பட்ட திருக்குறள்களை மனப்பாடம் செய்திருந்தேன்.

தமிழகத்தின் பாரம்பரியம், கலாச்சாரத்துடன், சென்னை உயர் நீதிமன்றத்தின் பாரம்பரியத்தையும் பாதுகாக்க வேண்டியது அனைவரின் கூட்டுப் பொறுப்பு, இந்த பாரம்பரியத்தை காப்பதில் என்னுடைய பங்கும் இருக்கும். நீதிமன்றம் சுமுகமான முறையில் இயங்க அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம். திருக்குறள்களை சுட்டிக்காட்டி நடுநிலைமை தவறாது செயல்படுவேன் என்று தெரிவித்தார்.



கவர்னர் மாளிகையில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நேற்று பொறுப்பேற்றுக்கொண்ட நீதியரசர் ஸ்ரீராம் கல்பாத்தி ராஜேந்திரனுக்கு, சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மலர்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார். நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோரும் வாழ்த்து தெரிவித்தனர்.

# வடமாநில கொள்ளையர்களை...(1-ம் பக்க தொடர்ச்சி)

லாரியை பின்தொடர்ந்து சென்றனர். சங்ககிரி சுங்கச்சாவடி வரை லாரி சென்றது. சுங்கச்சாவடியில் இருந்து மீண்டும் திரும்பி வந்தது. மீண்டும் 2 முறை சங்ககிரி வரை சென்று விட்டு வெப்படை வழியாக லாரி வந்தது.

வெப்படை ரோட்டில் வரும்போது சண்யாசிபட்டி பகுதியில் லாரி வேகமாக வந்தது. அதற்குள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதி போலீசாருக்கும் தகவல் கொடுக்கப்பட்டு உஷார் படுத்தப்பட்டனர். 2 பைக்குகள், 1 கார் மீது மோதி லாரி வேகமாக வந்தது. பின்னர், லாரியை விரட்டி இடைமறித்து போலீசார் நிறுத்தினர். லாரியில் இருந்த டிரைவரை கீழே இறக்கி அவரை உடனடியாக கைது செய்தோம்.

லாரியின் கேபினில் டிரைவருடன் 4 பேர் இருந்தனர். அந்த 4 பேரையும் கைது செய்தோம். அந்த லாரி கேரளாவின் திரிசூரில் இருந்து வந்தது என்றும் நமக்கு தகவல்கள் கிடைத்தன. தகவல் கிடைத்த உடன் இந்த லாரியை சண்யாசிபட்டியில் இருந்து வரும் வழியில் லாரியை ஜூமான் என்பவர் ஓட்டி வந்தார். லாரியில் போலீசார் இருந்தனர். லாரிக்கு முன்னும் பின்னும் போலீஸ் வாகனங்கள் சென்றன.

அப்படி செல்லும்போது லாரியில் உள்ள கண்டெய்னரில் இருந்து அதிக சத்தம் வந்தது. சத்தம் கேட்ட உடன் டிரைவரிடம் சொல்லி தோப்புக்காடு பகுதியில் லாரியை நிறுத்தினோம். பின்னர், லாரி டிரைவர் ஜூமானை அழைத்து கண்டெய்னரை திறக்க கூறினோம். கதவை திறந்து பார்க்கும்போது கண்டெய்னரில் 2 பேர் இருந்தனர். அப்போது, திடீரென கண்டெய்னரில் இருந்த நபர் தனது கையில் நீல நிற பையுடன் கீழே குதித்து ஓடினார். லாரி டிரைவர் ஜூமானும் போலீசார் பிடியில் இருந்து காட்டுப் பகுதிக்குள் தப்பி ஓட்டினார். தடுக்க முயன்ற இன்ஸ்பெக்டரை ஆயுதத்தால் தாக்கிவிட்டு தப்பியோடினர்.

தோப்புக்காடு பகுதியில் உள்ள ஒரு ஓடையில் இறங்கி அஸ்ரூ என்ற கொள்ளையன் பணப்பையுடன் ஓடினான். அஸ்ரூவுடன் சேர்ந்து ஓடிய ஜூமான் ஓடையில் வழுக்கி விழுந்தார். ஜூமானை எஸ்.ஐ. பிடிக்க முயன்றபோது அவரை தாக்கினான். இதையடுத்து, பின்னால் வேகமாக வந்த இன்ஸ்பெக்டர், ஜூமான் எஸ்.ஐ.-ஐ தாக்கியதையடுத்து தற்காப்புக்காக துப்பாக்கியால் சுட்டார். இன்ஸ்பெக்டர் துப்பாக்கியால் சுட்டதில் கொள்ளையன் ஜூமான் உயிரிழந்தான்.

இதையடுத்து, மற்றொரு கொள்ளையன் அஸ்ரூவை நிற்கும்படி எஸ்.ஐ. எச்சரித்தார். அப்போது, கொள்ளையன் அஸ்ரூ பணப்பையை கீழே போட்டுவிட்டு அங்கு கிடந்த கற்களை எடுத்து இன்ஸ்பெக்டரை நோக்கி வீசினான். இதனை தொடர்ந்து அஸ்ரூ முக்கிய குற்றவாளி என்பதால் அவன் தப்பியோடாமல் இருப்பதற்காக இன்ஸ்பெக்டர் அவனது காலில் துப்பாக்கியால் சுட்டார். இதில் படுகாயமடைந்த கொள்ளையன் அஸ்ரூவை கைது செய்துள்ளோம்.

இந்த கொள்ளை கும்பல் ஏ.டி.எம்.களை குறிவைத்து கொள்ளையடிக்கின்றனர். ஏ.டி.எம்.ல் உள்ள பணத்தை கொள்ளையடிப்பதுதான் இவர்களது நோக்கம். கைது செய்யப்பட்ட கொள்ளையர்களில் 5 பேர் அரியானா மாநிலம் பல்வால் மாவட்டத்தை சேர்ந்தவர்கள். மற்றொருவர் அரியானாவின் நூ மாவட்டத்தை சேர்ந்தவர் ஆவார்.

துப்பாக்கி சூட்டில் காயமடைந்த கொள்ளையன் அஸ்ரூ கோவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். எஞ்சிய 5 பேரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

கொள்ளையர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணத்தை இதுவரை எண்ணவில்லை. கண்டெய்னர் லாரிக்குள் ஒரு வெள்ளை நிற கிரிட்டா கார் இருந்தது. அந்த காரை கேரளாவின் திரிச்சூரில் ஏ.டி.எம். கொள்ளையில் பயன்படுத்தியுள்ளனர். அந்த காரில் சென்றுதான் திரிச்சூரில் 3 ஏ.டி.எம்.களில் கொள்ளையடித்துள்ளனர். இந்த கொள்ளை சம்பவம் தொடர்பாக கேரள போலீசார் கொடுத்த தகவலின் அடிப்படையில் தான் கிரிட்டா காரை கண்டுபிடிக்க வாகன சோதனையில் ஈடுபட்டோம்.

இந்த கொள்ளை சம்பவத்தில் மொத்தம் 7 பேர் ஈடுபட்டுள்ளனர். இதில் ஒருவர் என்கவுண்ட்டரில் கொல்லப்பட்டார். ஒருவர் துப்பாக்கி சூட்டில் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார். எஞ்சிய 5 பேரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. கைது செய்யப்பட்ட 7 பேரிடம் இதுவரை எந்த வழக்குகளும் இல்லை. கிருஷ்ணகிரி ஏ.டி.எம். கொள்ளை சம்பவம் தொடர்பாக அரியானாவின் மேவத் பகுதியை சேர்ந்த குற்றவாளிகள் 2 பேரை ஏற்கனவே கைது செய்துள்ளோம்.

தற்போது பிடிபட்டவர்களுக்கும், ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களுக்கும் என்ன தொடர்பு உள்ளது? ஏதேனும் திட்டம் உள்ளதா? என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த கொள்ளை சம்பவம் கேரளாவில் நடந்ததால் அம்மாநிலத்தை சேர்ந்த போலீசார் நம்முடன் சேர்ந்து விசாரணை நடத்தலாம். கொள்ளையர்களை பிடிக்க முற்பட்டபோது காயமடைந்த 2 போலீசார் தற்போது சிகிச்சையில் உள்ளனர். நாமக்கலில் 3 வாகனங்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

தமிழக போலீசார் முதற்கட்ட விசாரணையை நிறைவு செய்தபின் கேரள போலீசார் விசாரணையை தொடங்குவார்கள். கொள்ளையர்கள் பணத்தை மட்டுமே கொள்ளையடித்துள்ளனர். பிடிபட்ட கொள்ளையர்கள் ஏ.டி.எம்.களை குறிவைத்தே கொள்ளையடிக்கின்றனர்.

எஸ்.பி.ஐ. வங்கி ஏ.டி.எம்.களில் எப்போதுமே பணம் இருக்கும் என்பதால் அந்த ஏ.டி.எம்.களை குறிவைத்தே கொள்ளையடிப்பதாக பிடிபட்ட கொள்ளையர்கள் கூறினர்.

இவ்வாறு அவர் கூறினார்.



சென்னை சேப்பாக்கம், வேளாண்மைத்துறை இயக்குநரகத்தில் நேற்று வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்றளிப்புத்துறை ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் அபூர்வா, விதைச்சான்றுத்துறை இயக்குநர் முருகவேல்பாண்டியன், வேளாண்மைத்துறை இயக்குநர் பி.முருகேஷ் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனாரின் 120-வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு, அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.




சென்னை, வேளச்சேரியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், பழங்குடியினரின் கலாச்சாரத்தை பாதுகாத்தல் மற்றும் வளப்படுத்துதல் தொடர்பாக 2 நாட்கள் நடைபெறும் 'தொல்குடி' தேசிய மாநாட்டை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை செயலாளர் க.லட்சுமிபிரியா, பழங்குடியினர் நல இயக்குநர் அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.